# இந்திய ஜனதிபதிக்கு இலங்கையில் அமோக வரவேற்பு


Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 11

இதழ்: 330

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 25 ஷவ்வால் 30 வெள்ளிக்கிழமை [9-1-70]



உங்களுக்கு தேவையான

தங்க, வைர நகைகளுக்கு

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட்,

யாழ்ப்பாணம்.

போன்: 7199 தந்தி: வைரம்


## 20 ஆண்டுகளுக்கு முந்திய உறவை நினைவூட்டினர்

கோட்டை, வியாழன்

**பாரத குடியரசுத் தலைவர் திரு. வெங்கடகிரி வராககிரி இன்று காலை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கிய பொழுது அவருக்கு அன்பான வரவேற்பளிக்கப்பட்டது.**

**இருபது ஆண்டுகளுக்கு பின்னர் இங்கு வந்திருக்கின்றேன் இலங்கை மக்கள் முன்போலவே அன்பாக இருக்கிறார்கள் என்று ராஷ்டிரபதி கிரி விமான நிலையத்தில் கூறினார்.**

ஜனதிபதி கிரி இலங்கை விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன் உள்நாட்டமைச்சர் திரு. டபிள்யூ தகநாயக்காவும் போக்குவரத்து அமைச்சர் திரு. ஹாருள்ளேயும் இலங்கையிலுள்ள இந்தியக் ஹைகமிஷனரும் ஜனதிபதியின் விசேஷ 'புஷ்பக' விமானத்திற்குள் சென்று திரு. கிரியையும் அவரது குழுவினரையும் வரவேற்று அழைத்து வந்தனர்.



வெளியில் அவர் வருகைக்காக மகாதேசாதிபதி திரு வில்லியம் கோபல்லாவும் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவும் மந்திரி பிரதானிகளும் பிரமுகர்களும் காத்திருந்தனர்.

ஜனதிபதி விமானத்திலிருந்து இறங்கியதும் மகாதேசாதிபதி அவருக்கு நல்வரவு கூறி வாழ்த்துக்கள் தெரிவித்து வரவேற்றார்.

ஜனதிபதி திரு. கிரி புன்முறுவல் பூத்த முகத்துடன் கரங்களைக்குவித்து வரவேற்பையேற்றுக் கொண்டார்.

இந்திய ஜனதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக 21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. இலங்கை இந்திய தேசியக் கீதங்கள் இசைக்கப்பட்டன. இலங்கை விமானப்படையினர் அளித்த அணிவகுப்பு மரியாதையும் பாரதராஷ்டிரபதி ஏற்றுக் கொண்டார். பின்னர் விமானநிலையத்தில் குழுமியிருந்த பிரமுகர்கள் அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

அதன் பின்னர் ஜனதிபதி கிரி ராஜபவனியில் ராணி

இன்றிரவு பாரத ஜனதிபதியைக் கௌரவிக்குமுகமாக மகாதேசாதிபதி ராணி மாளிகையில் விருந்துபசாரம் நிகழ்த்துகிறார்.

### இன்று கண்டி விஜயம்

நாளைய தினம் இந்தியத் தலைவர் கண்டிக்கு விஜயம் செய்கின்றார். அங்கு கண்டி மாநகரசபை அவருக்கு பொதுவரவேற்பொன்று அளிக்கும். பேராதனையிலுள்ள தாவரவியல் தோட்டத்திற்கும் அதிபர் விஜயம் செய்வார், அவர் வருகையின் நினைவாக மரக்கன்று ஒன்றை அவர் அங்கு நாட்டுவார். மாலையில் தலதா மாளிகைக்குச் செல்வார். அவர் வருகையை உத்தேசித்து புத்தபெருமானின் புனித தந்தம் தரிசனத்திற்கு வைக்கப்படும்.

### சென்னையில் வழியனுப்பல்

இன்று காலை பாரத ஜனதிபதி திரு. வி. வி. கிரி சென்னையிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்ட பொழுது தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங், முதலமைச்சர் திரு மு. கருணாநிதி ஆகியோரும் இதர மந்திரிகளும் அவரை வழியனுப்பிவைத்தார்கள்.

# வட பகுதியில் சனசமூக நிலையங்கள் மூடப்பட்டன

## 3 வருட நன்கொடை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 547 சனசமூகநிலையங்களுக்கும் 1969ம்ஆண்டிற்குரிய நன்கொடைப்பணம் வழங்கப்படாததால் சில நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. மற்றும் பல நிலையங்களில் நிர்வாகம் சரியான முறையில் நடைபெறவில்லை. இந்த நிலையில் பல நிலையங்கள் உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள முடியாமலிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலைய சமாஜத்தலைவர் திரு வி சுப்பையா நமது நிருபரிடம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு வி சுப்பையாமேலும் கூறியதாவது: சனசமூகநிலைய ஆட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தென்மராட்சியில் சுமார் 50 சனசமூகநிலையங்கள் உண்டு. இவற்றில் பாதிக்கு மேல் சரியாக இயங்கவில்லை தென்மராட்சியிலுள்ள சனசமூகநிலையங்களின் பொதுக் கூட்டத்தைக் கூட்டிய போது 17 பேர் மட்டுமே சமுகமளித்தனர். இதிலிருந்து நிலையங்களில் மக்களின் அக்கறை குறைந்து வருவது தெரிகிறது. இங்குள்ள ஒரு சனசமூகநிலையத்தில் கதிரை, மேசை, வ[illegible], பெட்ரோல்மாக்ஸ் எல்லாம் காணாமல் போய்விட்டன. மேலதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சனசமூக நிலையங்கள் சீராக நடைபெற வேண்டுமானால் அரசாங்கத்தின் நன்கொடைப் பணமும், ஒத்துழைப்பும் அவசியம். உள்ளூராட்சி வாரம் சிறந்த முறையில் வடபகுதியெங்கும் கொண்டாடப்பட வேண்டுமானால் இம்மாத இறுதிக்குள் 69ம் ஆண்டிற்கான நன்கொடைப்பணம் சனசமூகநிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம்.

## "கேந்திர ஸ்தானத்தில் அமைய வேண்டும்"

### பல்கலைக்கழகம்பற்றி உடுவில் எம். பி, விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்கள் எல்லோரும் கல்வி கற்கக்கூடிய கேந்திர ஸ்தானத்தில் தமிழ்மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்பதே நோக்கம் அப்படி அமையும் பட்சத்தில் அது திருமலையிலேயே ஸ்தாபிக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தவருக்கு மாத்திரம் ஒரு பல்கலைக்கழகம் தேவையாக இருந்தால் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவிவிடலாம். ஆனால்

முதலில் குரல் எழுப்பினோம். ஆரம்பத்தில் எமது கோரிக்கைகளைத் தட்டிக் கழிப்பதற்காக காலஞ்சென்ற திரு. சு. நடேசபிள்ளை அப்போதைய அரசாங்கம் எமக்குப் போட்டியாக கலாச்சாரப் பல்கலைக்கழக கோரிக்கையை முன்வைத்து தூண்டிவிட்டது. அறுபத்திஆறும் ஆண்டின் பின்னர்தான் வேறு சிலர் எமக்கெதிராக இராமநாதன்பல்கலைக்கழகக் குரல் எழுப்பினர். அதற்கு முன்னர் பல்கலைக்கழகக் கோரிக்கை தமிழ்அரசுக்

## வீதிகளை அலங்கரித்து வைத்திருங்கள்

### மேயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

குடியரசு தலைவருக்கு ஒரு மகத்தான ராஜமரியாதையை செலுத்து முகமாக பவனி வரும்பாதையில் இல்லங்கள் வர்த்தக தா[illegible]னங்கள் முன்பாகவுள்ள தெருவோரங்களை சுத்தமாகவைக்கும்படியாழ்ப்பாணம்மேயர்

தொடர்புகளால் பின்னிப்பிணைக்கப்பட்ட எம் இரு நாடுகளுக்கிடையே நிலவும் சுமுகநட்புறவைத் துலாம்பரமாக உலகோர்க்கு வெளிக்காட்டும் வகையில் தாயகத் தலைவருக்கு அன்போடும் பண்போடும் ராஜவரவேற்பு அளி[illegible]

மறியற்சாலையில்

## வேலைநிறுத்தம் செய்யப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். யாழ்ப்பாணத்தவருக்கு மாத்திரம் ஒரு பல்கலைக்கழகம் தேவையாக இருந்தால் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவிவிடலாம். ஆனல் தமிழ்பேசும் மக்கள் வசதியாக கல்விபெறக்கூடிய வகையில் பல்கலைக்கழகம் அமைவதையே தமிழ் மக்கள் விரும்புவர்'' என்று உடுவில் எம். பி திரு. வி. தருமலிங்கம் உத்தேச பல்கலைக்கழகம் சம்பந்தமாக நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் சொன்ஞர். சங்குவேலியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தொடர்ந்து அவர் பேசுகையில் பல்கலைக்கழக விஷயமாக நாமே ஏகோபித்து அறுபத்திஆரும் ஆண்டின் பின்னர்தான் வேறு சிலர் எமக்கெதிராக இராமநாதன் பல்கலைக்கழகக் குரல் எழுப்பினர். அதற்கு முன்னர் பல்கலைக்கழகக் கோரிக்கை தமிழ்அரசுக் கட்சியினுலேதான் ஆரம்பித்து திருமலையில் கட்சி சார்பற்ற இயக்கம் ஒன்று காணிகளையும் கட்டடத்திற்கான நடவடிக்கைகளையும் பெற்றது. இந்நிலையில் எமது மத்தியில் பிளவுகளை நீக்கி ஏகோபித்து தமிழ் பேசும் இனத்திற்கென தமிழ்ப் பல்கலைக்கழகத்தை ஒரு பொதுவான மத்திய ஸ்தானத்தில் நிறுவக் கோருவோம் என்ருர்''.

# சுவீப்முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 280-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

28 X 0336 ரூ 100,000

இரண்டாவது பரிசு

23 P 0857 ரூ. 40,000

மூன்ருவது பரிசு

37 N 0660 ரூ. 10,000

தலா ரூபா 740 பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 14 A 0139 | 40 A 0621 | 10 L 0879 | 25 L 0689 |
| 15 A 0262 | 16 B 0865 | 01 L 0258 | 45 L 0037 |
| 32 B 0109 | 19 B 0540 | 44 L 0334 | 20 L 0829 |
| 28 C 0972 | 20 C 0216 | 01 M 0077 | 20 M 0909 |
| 43 C 0820 | 07 C 0077 | 19 M 0659 | 37 M 0452 |
| 22 C 0095 | 34 C 0470 | 16 M 0603 | 39 M 0187 |
| 37 c 0695 | 36 D 0597 | 19 M 0157 | 14 M 0485 |
| 27 D 0628 | 06 E 0754 | 13 M 0798 | 37 N 0696 |
| 02 E 0835 | 19 E 0908 | 12 N 0070 | 22 N 0214 |
| 18 F 0397 | 30 F 0739 | 32 N 0374 | 31 N 0396 |
| 24 F 0199 | 13 F 0023 | 30 O 0458 | 46 O 0115 |
| 29 F 0339 | 42 G 0716 | 33 O 0369 | 09 P 0204 |
| 21 G 0770 | 31 G 0996 | 17 P 0976 | 11 P 0048 |
| 34 G 0888 | 01 H 0882 | 04 P 0196 | 39 Q 0494 |
| 40 H 0960 | 03 H 0332 | 30 Q 0794 | 25 Q 0746 |
| 18 H 0073 | 26 H 0023 | 04 R 0608 | 36 R 0367 |
| 08 H 0518 | 40 H 0380 | 25 R 0548 | 11 R 0444 |
| 17 H 0579 | 46 H 0661 | 41 S 0301 | 29 T 0387 |
| 26 J 0501 | 20 J 0192 | 10 T 0971 | 23 T 0125 |
| 37 K 0113 | 08 K 0662 | 40 T 0060 | 42 T 0631 |
| | | 38 T 0266 | 13 U 0201 |
| | | 40 U 0681 | 32 U 0242 |
| | | 09 U 0828 | 28 U 0429 |
| | | 28 U 0477 | 23 U 0889 |
| | | 04 V 0375 | 37 V 0165 |
| | | 41 V 0538 | 18 V 0221 |
| | | 45 W 0253 | 28 X 0018 |
| | | 35 Y 0062 | 36 Y 0519 |
| | | 35 Z 0245 | 07 Z 0932 |
| | | 24 Z 0416 | 31 Z 0664 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## 'அரசாங்கத்துடன் ஒத்துழைத்தே உரிமைகளை பெறமுடியும்''

யாழ்ப்பாணம், வெள்ளி

''அறப்போராட்டத்தின் மூலம் உரிமைகளை பெறுவோம் என தமிழரசுக்கட்சியினர் கூறுகின்ருர்கள். அரசாங்கத்துடன்ஒத்துழைத்து உரிமைகளைப் பெறுவோம் என்று நாங்கள் கூறுகின்ரேம். இதில் எந்தப் பாதை சரியானது என்று திர்மானிக்கவேண்டியது வாலிபர்களின் பொறுப்பு''.

மீசாலை வடக்கு நேற்றிரவு நடந்த தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி கூட்டத்தில் முன்னுள் சாவகச்சேரி எம் பி திரு வி குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு குமாரசாமி மேலும் கூறியதாவது: ஒற்றையாட்சி

4-ம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் ...

சனசமூகநிலைய சமாஜத்தலைவர் திரு வி சுப்பையா நமது நிருபரிடம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு வி சுப்பையாமேலும் கூறியதாவது: சனசமூகநிலையங்களுக்கு நன்கொடை கிடைக்காததால் நிர்வாகத்தினர் அக்கறை காட்டாமலிருக்கின்றனர். சில சனசமூகநிலையங்களுக்கு 67ம், 68ம் ஆண்டு நன்கொடைப் பணமும் கிடைக்கவில்லை. 67ம், 68ம் ஆண்டு நன்கொடைப் பணமாக சுமார் 3000 ரூபா இதுவரை வழங்கப்படாமலிருக்கிறது இவற்றை பெறுவதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்தும் பயன் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு சனசமூகநிலையங்களுக்கும் சென்ற வருடம்வரை நன்கொடைப் பணமாக 100 ரூபாவரை வழங்கப்பட்டு வந்தது. 1970ம் ஆண்டு முதல் நிலையங்கள் 3 பிரிவாக பிரிக்கப்பட்டு 300 ரூபாவரை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் நன்கொடைப் பணம் வழங்காததால் சில நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. சில நிலையங்கள் இடிந்து விட்டன.

ஒவ்வொரு கிராமத்திலும் சனசமூகநிலையங்கள் இயங்காவிடில் உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் உள்ளூ

## மலேரியா நோயினுல் 8 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம் வியாழன்

பண்டத்தரிப்புப் பகுதியில் மலேரியா நோயினுல் பீடிக்கப்பட்ட 89 பேரை சுகாதார இலாகா கண்டு பிடித்துள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து நடாத்தப்பட்ட மலேரியா நோய் பரீட்சையின் போது சுமார் 1500 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இங்கு இக்கொடிய நோய் மேலும் பரவிவிடாமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் இப்பகுதி சுகாதார பரிசோதகர் திரு. எஸ். சபாநாதன் ஈடுபட்டுள்ளார். நோயினுல் பாதிக்கப்பட்ட அனைவரும் தொடர்ந்து பரிசோதனைக்குட்படுத் தப்படவுள்ளனர். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் இந்நோய் மேலும் பரவிவிடும் என அஞ்சப்படுகிறது.

## அமைச்சர் தெரிவு

சென்னை, ஜன. 8

தமிழ்நாடு மேல் சட்டசபைக்குவடஆற்காடுதொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் தமிழக உணவு அமைச்சர் திரு. ப. உ, சண்முகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

வ... பெட்ரோல்மாக்ஸ் | அவசியம்.

மறியற்சாலையில்

## வேலைநீக்கஞ் செய்யப்பட்ட ...ஊழியர் மீண்டும் நியமன...

அராலி, வியாழன்

சிங்களத்தேர்ச்சி பெறவில்லை என்பதற்காக வேலை நீக்கஞ் செய்யப்பட்டிருந்த மறியற்சாலை சிறு ஊழியர்கள் சிலரை அரசாங்கம் மீண்டும் சேவைக்கு அழைத்துள்ளது.

இவர்கள்இப்போது நாளாந்த சம்பள ஊழியராகக்கடமையாற்றுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவர்கள் கடந்த மூன்று மாதங்களாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

தென்மராட்சி பொங்கல் விழால்

## 100 டிராக்டர்; 200வண்டில்; 500 சைக்கிள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வருடா வருடம் நடைபெறும் தைப்பொங்கல் விழாவை தென்மராட்சியில் இம்முறையும் சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி இளைஞர் முன்னேற்ற கழகத்தின் ஆதரவில் நடைபெறும். இவ்விழா இம்மாதம் 14-ம்தேதி நுணுவிலில் நடைபெறவிருக்கிறது.

கச்சாய் அம்மன் கோவிலிருந்து புறப்பட்டு கொடிகாமம், ஊடாக நுணுவிலை வந்தடையும். ஊர்வலத்தின் முதல் வண்டியில் சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினம் செல்வார்.

இந்த ஊர்வலத்தில் 100 டிராக்டர்களும், 200 மாட்டு வண்டிகளும், 500 சைக்கில்களும் செல்லுமென கழக செயயிளாளர் தெரிவித்தார்.

ஊர்வலத்தில் கரகஆட்டம், காவடிநடனம், விஞேத உடை அணிந்தோர் செல்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஊர்வலத்திற்குநடுவில் 500வாலிபர்கள் அணிவகுத்துச்செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மந்திரி

## தயானை கொல்ல முயற்சி?

டெல்-அவில், ஜன. 8

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் தயானைக் கொலை செய்ய முயற்சி செய்ததாக 6 அரபுக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ரயிலில் சண்டை

செங்கல்பட்டு,

சென்னை எழும்பூரில் இருந்து ஏழுமலை என்பவரும் மற்றும் சிலரும் திருவனந்தபுரம் ரெயில் மூன்ருவது வகுப்புப் பெட்டிஒன்றில் ஏறினர். இந்தப்பெட்டியில் கேரளாவைச் சேர்ந்த பிரயாணிகள் சிலர் பிரயாணம் செய்தனர். 4 பேர் உட்கார இடம் உள்ள இடத்தில் 2 பேர்வீதம் உட்கார்ந்திருந்தனர்.

செங்கல்பட்டு பிரயாணிகள் சிலர் காலியாக உள்ள இடத்தில் உட்கார முயன்ற போது அதைக்கேரளாவைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபித்தார்கள்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் வாய்ச் சண்டை ஏற்பட்டு அது வலுத்துவிட்டது. செங்கல்பட்டு பிரயாணிகள் மூன்று பேரை, கேரளத்தைச் சேர்ந்தவர்கள் அடித்து விட்டனர். ஏழுமலை என்ற பிரயாணி பூட்சால் தாக்கப்பட்டார். அவருடைய சட்டையையும்பிடித்து கிழித்து எறிந்தனர்

திருவனந்தபுரம் ரெயில் செங்கல்பட்டு எல்லையை நெருங்கியவுடன் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரெயிலை நிறுத்தினர். ரெயிலில் பிரயாணம் செய்த செங்கல்பட்டு பிரயாணிகள் பலரும் ஒன்று சேர்ந்து தாக்கிய ஆசாமிகள் மூவரையும் பிடித்து 'அண்டர் கார்ட்' டிடம் ஒப்படைத்தனர்.

ரெயில் செங்கல்பட்டையடைந்தவுடன் செங்கல்பட்டு பிரயாணிகள் அந்தப் பெட்டியை சூழ்ந்து கொண்டனர். ஒரு பிரயாணி தன் காலால் யன்னலை உடைத்து உள்ளே புகுந்தார்.

தாக்கிய 3 ஆசாமிகளில் 2 பேர் பெட்டியின் மறுபக்கவழியாக கீழிறங்கி ஓடிவிட்டனர். ஒரு பிரயாணி அகப்பட்டுக் கொண்டார். இக் கலகத்தினுல் ரெயில் அரைமணி தாமதமாக செங்கல்பட்டை விட்டுப் புரப்பட்டு சென்றது.

பின்னர் விமானநிலையத்தில் குழுமியிருந்த பிரமுகர்கள் அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

அதன் பின்னர் ஜனுதிபதி கிரி ராஜபவனியில் ராணி மாளிகைக்குப் புறப் பட்டார்.

## மரங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, வியாழன்

இப்பகுதியில் ஏற்பட்ட பெருமழையினுல் பனை, தென்னை மரங்கள் பாதித்துள்ளதால் தாங்கள் கட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தில் சலுகை செய்ய வேண்டும் என இப்பகுதியில் உள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்காரர்வவுனியா எம் பி. திரு. தா சிவசிதம்பரத்தின் மூலம் உள்நாட்டமைச்சரைக்கேட்டுள்ளனர்.

## ஆஸ்திரேலிய நன்கொடை

கோட்டை, வியாழன்

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளக்கஷ்டங்களுக்கு நிவாரண உதவியாக ஆஸ்திரேலிய அரசாங்கம் சுமார் 33 ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கியிருக்கின்றது.

## தற்கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவு தற்கொலை முயற்சி வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டயஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சாட்சியமளிக்கவிருந்த டாக்டர் ஆஜராகாததால் மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 31-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் மண்டைதீவைச் சேர்ந்த தனநாயகி (வயது 18) என்பவர் தற்கொலைசெய்ய உடந்தையாக இருந்ததாகவும், தற்கொலைசெய்ய முயற்சித்ததாகவும், தனராசா வயது (22) என்ற வாலிபர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

எதிரி சார்பில் புறக்டர் வி பரமசிவம்பிள்ளை ஆஜராஞர். பொலிஸ் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜராஞர்.

...தையை செலுத்து முகமாக பவனி வரும்பாதையில் இல்லங்கள் வர்த்தக தாபனங்கள் முன்பாகவுள்ள தெருவோரங்களை சுத்தமாகவைக்கும்படியாழ்ப்பாணம்மேயர் திரு. சி. நாகராசா பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பூரணகும்பம், பூம்பந்தல்கள், மகரதோரணங்கள் போன்றவைகளால் பாதைகளை அலங்காரம் செய்வதோடு, பாதையின் இருமருங்கிலும் அணியணியாக நின்று நல்வரவேற்புத் தெரிவிக்கும்படியும், மேயர் கேட்டுள்ளார்.

மொழி, மத, கலாச்சார, ...சமூகநட்புறவைருத் துலாம்பரமாக உலகோர்க்கு வெளிக்காட்டும் வகையில் தாயகத் தலைவருக்கு அன்போடும் பண்போடும் ராஜ வரவேற்பு அளி போம் என்றும் மேயர் மேலும் தெரிவித்துள்ளார்.

11-ம் தேதி காலை 8-30 மணிக்கு இந்தியக் குடியரசு தலைவர் திரு. வி. வி கிரி பலாலி விமான நிலையத்தை விசேட விமான நிலையத்தை விசேட விமானத்தில் வந்தடைவார். அங்கிருந்து ஊர்வலமாக, யாழ்ப்பாணம் நகர மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

## ஜனுதிபதியின் ஊர்வலம் இவ்வீதிகளால் செல்லும்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாரத ஜனுதிபதி திரு. வி. வி. கிரிக்கு இம்மாதம் 11-ந் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் பொது வரவேற்பு அளிக்கப்படும்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லையிலிருந்து நகர மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். வீதியில் இருகரையில் கல்லூரி மாணவர்கள் அணிவகுத்து நிற்பார்கள்.

நாச்சிமார் கோவில் வீதியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் பலாலி வீதி வழியாக ஸ்ரான்லிவீதிச் சந்தியை வந்தடையும். அங்கிருந்து ஸ்ரான்லி வீதி வழியாக காங்கேசன்துறை வீதிச் சந்தியை வந்தடையும்.

ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறைவீதிச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக சத்திரத்துச் சந்தியை வந்தடையும். சத்திரத்துச்சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக மகாத்மாகாந்தி வீதிச் சந்தியை வந்தடையும். அங்கிருந்து மகாத்மாகாந்தி வீதி வழியாக பொதுஜன நூல் நிலைத்யதைக் கடந்து பிரதானவீதிச் சந்தியை அடைந்து அங்கிருந்து நகர மண்டபத்தை வந்தடையும்.

## நடேசன் தலைவராக தெரிவு

கோட்டை, வியாழன்

வழக்கறிஞர் சங்கத் தலைவராக செனட்டர் எஸ். நடேசன் கியூ. சி. ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அட்டோர்ணி ஜெனரல் திரு. எல். பி. ரி. பிரேமரத்ன கியூ: சி. தலைமையில் நடந்த வழக்கறிஞர்கள் சங்க வருடாந்த கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது.

திரு. ஜே. எம். ஜெயமன்ன உபதலைவராகவும், திரு. நிகால் ஜெயவிக்கிரம செயலாளராகவும், திரு. ஏச். டி. பெரேரா தனுதிகாரியாகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்

## 1,64,359 ரூபா லாபம் பெற்றது

அராலி, வியாழன்

வலி மேற்கு பலநோக்குக் கூட்டுறவு சமாச 24-ம் ஆண்டுக் கூட்டம் தலைவர் திரு. வை. இராசசுந்தரம் தலைமையில் நடைபெற்ற போது நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிதியாண்டில் ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 359 ரூபா 17 சதத்தை லாபம் ஈட்டியுள்ளது. இச்சமாசம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பெறப்பட்ட அதிகம் கூடிய நயம் இது தான் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நிர்வாகசபையில் காலியான ஏழு இடங்களுக்கும் புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

## வெள்ளத்தை அகற்ற முடிவு

அராலி, வியாழன்

வெள்ளம் தேங்கி நிற்கும் வயல்களிலிருந்து வெள்ளத்தை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் அராலி தெற்கு - கிழக்கு பயிர்ச் செய்கைக் குழு ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

பண வசூலாளர்:

யாழ். நகரில் பிரபல ஸ்தாபனத்திற்கு பண வசூலாளர்கள் தேவை. ரொக்கப் பிணை செலுத்தக்கூடிய ஜீ. சீ. ஈ. தராதரமுள்ளவர்கள் மட்டும் எழுத்து மூலம் 14-1-70க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1633, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1633

ரைப்ரைட்டர்:

தனிப்பாவிப்பிலுள்ள தமிழ் போட்டெபிள் ரைப்ரைட்டர் (Typewriter) தேவை. ஒலிம்பியா அல்லது றெமிங்ரன் விரும்பத்தக்கது. தெ. துரையப்பா, பிரதான வீதி, தெல்லிப்பளை. 1634

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில்) அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமூகமளிக்கவும். லிங்கோ லுப்பிறிக்கேசன் சேர்விஸ், பலாலிரோட்டு, கோண்டாவில். 1762

### திருடினராம்

சித்தன்கேணி, வியாழன்

சித்தன்கேணிப் பகுதியில் ஒரு வீட்டில் வீட்டுப் பணியாளராக இருந்த சுகததாச (21 வயது) என்பவர் தமது எசமானின் சைக்கிளையும், 5 ரூபா பணத்தையும் அரிசி வாங்குவதற்காகக் கடைக்குச் செல்லுவதாகத் தெரிவித்துவிட்டு, திருடிச்சென்றுவிட்டாராம்.

காலையில் சென்ற இவர் மாலை வரை வீடு திரும்பாததையடுத்து சங்கானைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

#### அரசாங்கக் கேள்விகள்

நீர்ப்பாசனத் திணைக்களம்

என். 640- நீர்ப்பாசன திணைக்கள வவுனியா உப பிரிவிலுள்ள கல்லாறு அணைக்கட்டுத் திட்ட வாய்க்கால் திருத்த வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்கட்கு 1970-1-2-ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

G. P. 1034

### கேள்வி விளம்பரம்

ஆனைக்கோட்டையிலுள்ள சயாச கல்லுண்டாய் உப்பளத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகளைக் குத்தகையில் செய்வதற்கு மேற்படி சமாசத் தலைவரால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. வரம்பு திருத்துதல்.
2. உப்பு விளையும் பாத்திகள் சீர்படுத்துதல்.
3. உப்புச் சேகரித்தலும், சுமத்தலும்.
4. உப்புக் குவித்தலும், மூடுதலும்.
5. குடிநீர் விநியோகம் செய்தல்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்வது 25-1-70 பி. ப. 5 மணிக்கு முடிவடையும். கேள்விப்பத்திரங்களும் அதற்கான விபரங்களையும் வலி. மே. ப. நோ. கூ. ச சமாச அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேள்விப் பத்திர விண்ணப்பப்பணமாக ரூபா 2/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

வை. இராசசுந்தரம்,
தலைவர்,
வலி மேற்கு ப. நோ.
கூ. ச. சமாசம்,
1908 சங்கானை.


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
ZORRO
at the Court of Spain
(Scope-Color)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
காவல் காரன்

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

5வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி


உதைபந்தாட்டப் போட்டி

## அகில இலங்கை ரீதியில் மாநகரசபை நடத்தும்

### யாழ். மேயர் தகவல்

பருத்தித்துறை, வியா

'நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவ உணர்ச்சியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதற்காக அகில இலங்கை ரீதியில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று ஒழுங்கு செய்வது வரவேற்கத்தக்கது. இவ்வித உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடாத்த யாழ் மாநகரசபை உத்தேசித்துள்ளது.

இவ்வாறு யாழ். மேயர் திரு. எஸ். நகராசா நேற்று முன்தினம் வதிரி கலாமன்ற ஆதரவில் செல்வன் ஆ. கந்தசாமி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும்போது குறிப்பிட்டார். திரு எம் பி அண்ணுச்சாமி தலைமை வகித்தார்.

கூட்ட இறுதியில் வல்வை 'ஏ' கோஷ்டிக்கும் உடுப்பிட்டித் தெரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டக் காட்சிப் போட்டியில் உடுப்பிட்டிக் கோஷ்டி 2 1 கோல்களால் வென்றது. திரு. எஸ். சிவதயாபரன் மத்தியஸ்தம் வகித்தார். பெனடிக்ட், கணேசமூர்த்தி இரத்தின சிங்கம் ஆகியோர் திறம்பட விளையாடினர்.

மாவட்ட

## இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீவுப்பகுதி படகு சேவை

வேலணை, வியாழன்

நெடுந்தீவு மோட்டார் படகுச் சேவையை பொது வேலைப்பகுதியினர் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பொறுப்பேற்றுள்ளதால் குறிகாட்டுவான் தபால் நிலையத்திற்கும் பொது வேலைப்பகுதி ஓவசியரின் அலுவலகத்திற்கும் தொலைபேசிவசதி ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று யாழ்ப்பாணம்செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. கேட்டுக்கொண்டார்.

அரசாங்க அதிபர் திரு. எவ். ஸி. பீட்டர்ஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு ஊர்காவற்றுறையிலிருந்து நடைபெறும் படகுச் சேவை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இச்சேவைகளை பொது வேலைப்பகுதி பொறுப்பேற்று நடத்தவேண்டுமென பண்டிதர் இரத்தினம் இக் கூட்டத்தில் வற்புறுத்தினார். இவ்விரு பிரேரணைகளும் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் விற்க முடியாது தேங்கும் வெங்காயத்தை வேறு பகுதிகளுக்கு கொண்டுசெல்லத் தாம் அனுமதிச் சீட்டுவழங்க நடவடிக்கைமேற்கொண்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

முருகண்டி பிள்ளையார்

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 9—1—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 துதிப்பாடல்கள், 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ,

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்பு

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 25-ம் திகதி 9-1-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்:-** வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும் நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேறலாம். வீட்டில் சுமுகமான சூழ்நிலை தென்படும். உடன்பிறந்தவர் ஒருவரிடமிருந்து உற்சாகமான செய்தியும் கிடைக்கலாம்.

**ரிஷபம்:-** நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும், நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவதற்கு முயற்சிஎடுக்கலாம், செலவினங்களை கட்டுப்படுத்திக்கொள்ளவும். எதிர்பாராத இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கை சிறந்த மருந்து.

**மிதுனம்:-** பொன்னான சந்தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச் செய்யும். தேடிய உறவு உங்களை நாடியே வரலாம். இளம் பருவத்தினர்களுக்கு இன்று இன்பப் பூங்கா. பறந்துவரும் கடிதம் உங்களை பரவசப்படுத்தும். சுபநாள்.

**கடகம்:-** தொல்லைகள் அலைமோதும். மனநிம்மதியைத் தேடிஅலைவீர்கள், குடும்பத்திலும் சிறுபிணிக்கு இடமேற்படலாம். வைத்தியச் செலவுகளுக்காகப் பணம் விரயமாகலாம் நண்பர்களை நம்பவேண்டாம். மதுபானத்தைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:-** உழைப்பின் வெற்றிக்கு இன்று உறுதியளிக்கப்படுகிறது. அதிக பிரயாசையின்மூலம் ஆதாயத்தைத் தேடுவீர்கள். பரோபகாரச்சிந்தை மேலிடும். சுற்றாடலில் நிலைமை சீரடையும், உழைப்புக்கேற்ற ஓய்வும் அவசியம் தேவை.

**கன்னி:-** அருளும் பொருளும் இன்று இணைந்துகிடைக்கும், தொழில்துறையில் ஏற்படும் போட்டியில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும், சிலர் வாழ்க்கையில் அதிகாரப் பேறு கிடைக்கலாம். நீண்டபயணத்தைத் தவிர்க்கவும்.

**துலாம்:-** தெளிந்த மனதுடன் செயலாற்றப்புறப்படுவீர்கள். திரைப்படத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் சிறப்படைவர். முயற்சிசெய்யின் முன்னேற்றத்துக்குத் தாராளமாக இடமுண்டு. பணவிவகாரம் திருப்தியைக் கொடுக்கும்.

**விருச்சிகம்:-** நிதியின் முடக்க ஏற்படும், சிலர்வீண் பழிக்கும் இலக்காவார்கள். விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும், பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம், துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

**தனுசு:-** நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர். எதிர்பார்த்த பொருள்வரவு இன்று தடைப்படலாம். உடல்நலத்தில் அதிக கவனம்செலுத்தவேண்டும், ஊண் விடயத்தில் சுகாதாரம் விரும்பத்தக்கது. நலிவுக்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

**மகரம்:-** கைநிறையப்பணம், காதல்செய்யத் துணை, வழ்க்கையே கலகலப்பாக இருக்கும். இனிக்கப் பேசுவதன்மூலம் வேண்டியவர்களைச் சொக்கவைப்பீர். அலங்காரப் பொருட்களில் ஆர்வம் பிறக்கும். சுவையான தினம்.

**கும்பம்:-** அதிக ஆசை ஆபத்தைத் தேடித்தரலாம், அன்னியர்களுடன் பழகுவதில் அதிக அவதானம்செலுத்த வேண்டும், எதிலும் மனதை அதிகம் அலட்டிக்கொள்ளாதிருப்பது விரும்பத்தக்கது, தெய்வநம்பிக்கை வேண்டும்.

**மீனம்:-** ஆராய்ச்சியாளர்களுக்கு பொன்னான தினம், அறிவுத்தாகம் மேலிடும், இனபந்துக்களின் கொண்டாட்டங்களும் இடம்பெறும், சிலர்புதிய வாகனமொன்றை கொள்வனவு செய்வதில் கருத்தைச் செலுத்துவர்.

## 'சனசமூக நிலையங்கள் கிராமிய பல்கலைக்கழகம் ஆகும்'

### மன்னர் அரசாங்க அதிபர் உரை

முதலிய ... உட்பட பல பிரமுகர்கள்

## செய்திச் சுருக்கம்

### யூ.என். பி.க்கு ஆதரவு

கல்முனைப் பட்டின சபையின் சுயேச்சை அங்கத்தவர்களான திரு விகனகசூரியமும், திருமதி விகனகசூரியமும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர். 7 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சபையில் 2 வட்டாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியினர் வெற்றிபெற்றனர்.

0 0 0

### உற்பத்திப் பொருட்கள்

உள்நாட்டு கைத்தொழில் பொருள் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலைபற்றி கைத்தொழில் அமைச்சுக்குப் பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்படுமென அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலை கட்டுப்பாடு பற்றி ஆராய்ந்த மந்திரி சபை உப-கமிட்டியின் சிபார்சைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### நியமனம்

மாணவ ஆசிரியர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட பலருக்கு நேற்று முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தத்தம் தொகுதிகளிலுள்ள வித்தியாலயங்களுக்கே நியமிக்கப்பட்டுள்ள இம்மாணவ ஆசிரியர்களில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு தமிழ்மொழி மூலமும் சிங்கள மொழி மூலமும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

0 0 0

### சந்தேக நபர் றிமாண்டில்

மன்னாரில் உள்ள தாழ்வுபாடு என்ற கிராமத்தில் இராணுவவீரர் இருவர் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து 21 சந்தேக நபருக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மன்னார் மேலதிக நீதிபதி திரு கே வி நவரத்தினம் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு ஜனவரி 16ம் தேதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

0 0 0

### கிராமத்தில்

தமிழ்மக்கள் பௌத்த சமயத்தை தழுவுவதற்கு எல்லாவிதமான பௌத்த தர்மக் கொள்கைகளையும் அவர்கள்மத்தியில்போதிக்க மல்வத்தை பௌத்த பீடாதிபதி என்ற வகையில் உதவ வேண்டும் என்று அகில இலங்கை இந்து பௌத்த சம்மேளனத் தலைவர் திரு எம் வைரமுத்து, மல்வத்தை பௌத்த பீடாதிபதியாகத் தெரிவு செய்பட்ட உணமடுகல்லே ஸ்ரீ சுமணதிஸ்ஸ சிர்த்தார்த்த மகாநாயக்க தேரோவைப் பாராட்டி நடந்த கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

0 0 0

### சந்தேக நபர் ஆஜர்

தலவாக்கொல்லை பகுதியைச் சேர்ந்த மடக்கும்பர தோட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் 22ம் திகதி நிகழ்ந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பொலிசாரினல் கைதுசெய்யப்பட்ட 43 சந்தேகநபர்களும், அட்டன் மாஜிஸ்திரேட் திரு எம் சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேகநபர்களை இம் மாதம் 10ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

0 0 0

### அனுதாப வேலைநிறுத்தம்

அட்டன்தலவாக்கொல்லை பகுதிகளைச் சேர்ந்த 1 லட்சம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனுதாப வேலைநிறுத்தம் ஒன்றில் குதிக்க வேண்டி நேரிடும் என்று மூதவை உறுப்பினர் திரு ஆர் யேசுதாசன் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தினல் வழங்கப்படும் இலவச அரிசியை தொழிலாளர்களுக்கு விநியோகிக்க மறுப்பது பெரிய அக்கிரமச் செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


0 0 0

### உபகரணம் இல்லை

மஸ்கெலியா அரசினர் வைத்தியசாலை நீரில்மூழ்கிய பின்னர் மிக நவீனமுறையில் பல லட்சம் ரூபா செலவில் வைத்தியசாலை அமைந்துள்ளதெனினும், இன்னும் தக்க உபகரணங்கள் பொருத்தப்படவில்லை. ஆமைவேகத்தில் வேலைகள் நடைபெறுவதாக புகார் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட்செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
நடித்த
வல்லவன் ஒருவன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630.930
பிறிப்போயா, போயா 2-30 மணி
காந்தாராவ்-ராஜ்ஸ்ரீ
நடித்த
வீரபாண்டியன்

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
ஆயிரத்தில்ஒருவன்
4-30க்கு மட்டும்
SPY IN THE GREEN HAT

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya, Pre-Poya 4 shows
Franco Nero, Elisa Montes
in
TEXAS ADDIOS
(adults only)

...க்கு [illegible]கொண்டுசெல்லத் தாம் அனுமதிச் சீட்டுவழங்க நடவடிக்கைமேற்கொண்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

முறிகண்டி பிள்ளையார் கோவில் அருகில் அக்கிராயன் குளத்திட்ட மக்களுக்கு பயன் படத்தக்க முறையில் புகையிரத நிலையம் ஒன்றை நிறுவவேண்டுமெனவும், முறிகண்டியில் பெற்றோல் டீசல் நிலையம் அமைக்கப்படவேண்டுமெனவும் பண்டிதர் இரத்தினம் கேட்டுக்கொண்டார்.

## முல்லைத்தீவு ப. ச. நன்றி கூறுகிறது

முல்லைத்தீவு, வியாழன்

பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு அவ்வப்போது நடவடிக்கை உடனுக்குடன் மேற்கொண்ட வவனியா எம். பி. முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன், கிராம சேவையாளர் திரு. க. கதிர்காமு ஆகியோரின் சேவையைப் பாராட்டி முல்லைத்தீவு பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பட்டியலும் இப்பகுதியில் தயாரிக்கப்பட்டுவருகிறது.

# 'சனசமூக நிலையங்கள் கிராமிய பல்கலைக்கழகம் ஆகும்'

## மன்னார் அரசாங்க அதிபர் உரை

முசலி, [illegible]

'கிராமப்புறங்களில், கல்வியறிவை முன்னேற்றும் பல்கலைக் கழகமாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன இப்பகுதிகளில் இருக்கும் சனசமூக நிலையங்களை முன்னேற்றுவதில் ஒவ்வொருவரும் முயற்சி எடுக்கவேண்டும்' எனமன்னார் மாவட்ட சனசமூக நிலையங்களின் பிராந்திய நிறைவேற்றுக் குழுவின் ஆரம்பக் கூட்டத்தின்போது மன்னார் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு. தேவரெத்தினம் டான்போத் கூறினார்.

உள்ளூராட்சி மன்ற தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் மன்னார் மாவட்ட கமத்தொழில் ஆணையாளர் திரு. வி. சி. கனகரத்தினம், மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. கா. மகேந்திரன், மாந்தை மன்னார் காரியாதிகாரிகள் உட்பட பல பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர்.

## வேலணை நூல் நிலைய திறப்பு விழா

வேலணை, வியாழன்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாஸா இம் மாதம் 31-ம் திகதிய வட பகுதி விஜயத்தின்போது வேலணை கிராமசபைக்கு அருகே புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொதுநூல் நிலையத்தை திறந்து வப்பார். இதற்கான ஏற்பாடுகள் கிராமசபையினரால் கவனிக்கப்பட்டுவருகிறது.

## வீதிகளில் வெள்ளம்

வேலணை, வியாழன்

தீவுப்பகுதி பஸ் சேவை மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளை சீர் திருத்துவதில் இப்பகுதி இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். சில வீதிகளில் இன்னும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

...வைக்க உத்தரவிட்டு ஜனவரி 16ம் தேதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

0 0 0

## கிராமத்தில் குடிசைகள்

மட்டக்களப்பு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல கிராமங்களில் வீடு இழந்தவர்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. அதற்கான வேலைகள் வெகுதுரிதமாக நடைபெற்று வருவதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

0 0 0

## வேலைநிறுத்தம் முடிந்தது

கடந்த டிசம்பர் மாதம் 11ம் திகதியிலிருந்து நடைபெற்றுவந்த பொகவந்தலாவை சென்ஜோன்டெல்வி தென்மதுரை தோட்ட வேலைநிறுத்தம் முடிவடைந்தது. அட்டன் தொழில்காரியாலயத்தில் கடந்த 5ம் திகதி நடந்த பேச்சுவார்த்தைகள் வெற்றி அளித்ததைத் தொடர்ந்து தொழிலாளர் இம்மாதம் 8ம் திகதியிலிருந்து திரும்பினார்கள்.

0 0 0

## பௌத்த பீடம் உதவ வேண்டும்

...த ஆலயப் பிரவேசத்திற்கு ...டை ஏற்பட்டு இருக்கின்ற இந்த வேளையில் 5 லட்சம்

...பல லட்சம் ரூபா செலவில் வைத்தியசாலை அமைந்துள்ளதெனினும், இன்னும் தக்க உபகரணங்கள் பொருத்தப்படவில்லை. ஆமை வேகத்தில் வேலைகள் நடைபெறுவதாக புகார் சொல்லப்படுகிறது. வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதி மட்டும் பிறிதொரு கட்டடத்தில் அமைந்துசெயற்பட்டு வருகிறது.

0 0 0

## மின்சாரம் கிடைத்தது

கடந்த வாரம் வத்துகாமம் பகுதியைச் சேர்ந்த உடத்தனவின்னை, வத்தேகெதர பொல்கொல்ல, பள்ளேத்தல வின்னை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டது.

0 0 0

## நாட்டின் அபிவிருத்தி

'ஒருநாட்டின் அபிவிருத்தி அந்நாட்டில் வாழும் பலதரப்பட்ட சமூகத்தவர்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. இந்த ரீதியில் காலியிலுள்ள சிங்கள முஸ்லிம் மக்களின் ஒற்றுமையும் சகோதரத்துவமும் இலங்கை முழுவதற்குமே ஒரு முன்மாதிரியாகும்.' என்று காலியில் நடந்த பொதுக்கூட்டத்தில் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயக்கா பேசும்போது கூறினார்.

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி
★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா
மற்றும்பலர் நடித்த
அஞ்சல்பெட்டி 520

100க்கு மேற்பட்ட பரிசுகள்




விங்க் மை
வாங்கி
பெட்டிகள் சேர்த்து
பரிசுகள் பெறுங்கள்
விபரங்களுக்குத்
துண்டுப்பிரசுரங்களைக்கேட்டுவாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான் ராணுவத் தளபதி பதவி நீக்கம்

பேரூட், ஜன. 8

லெபனான் ராணுவத்தின் சேனாதிபதி ஜெனரல் புஸ்தானி பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சிலதினங்களாக இஸ்ரேலியர் லெபனான் எல்லைப்பிரதேசத்தில் மேற்கொண்டுவரும் கடுமையான தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கின்றது.

லெபனான் மந்திரிசபை கடந்த இரண்டுதினங்களாக சுமார் ஐந்து மணிநேரம் ஆலோசனைகள் நடத்திய பின்னர் இந்த முடிவைஎடுத்துள்ளது.

ஜெனரல் புஸ்தானி ஓய்வு பெறும் வயதை அண்மிவிட்டதாகவும் நீண்டகாலத் திட்டங்களை அவரால் மேற்கொள்வது கடினமாய் இருக்குமென்றும் அதனாலேயே அவர்பதவியிலிருந்து விலக்கப்பட்டார். என்றும் லெபனான் பிரதமமந்திரி திரு. கராமி தெரிவித்திருக்கிறார்.

ஜெனரல் புஸ்தானி ராணுவத்தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டு வெளிநாட்டில் லெபனான் தூதுவராகஅனுப்பப்படுவார் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் அரபுக் கொமாண்டோக்களுக்கும் லெபனான் அரசாங்கம் காவல்படையினருக்குமிடையில் ஏற்பட்டமோதல்களின் போது ஜெனரல் புஸ்தானி கெய்ரோவுக்குச் சென்று சமரசமுயற்சிகளில் ஈடுபட்டார். அரபுக்கொமாண்டோகளுக்கும், லெபனான் அரசாங்கத்துக்குமிடையில் சமரச உடன்பாடு ஏற்படுவதற்கு அவரே முக்கியகாரணமாக விருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெனரல் புஸ்தானி பதவியிலிருந்து விலகியபோதிலும் அவர் மேற்கொண்ட ஒப்பந்தங்கள்யாவும் கௌரவிக்கப்படும் என்று பிரதமர் திரு கராமி தெரிவித்திருக்கிறார்.

ஜெனரல் புஸ்தானியின் பதவிக்கு ஜெனரல் நூஜயன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று இஸ்ரேலிய விமானங்கள் ஐக்கிய அரபுக் குடியரசின் ராணுவநிலைகள் மீது கடும்தாக்குதல் ஒன்றை மேற்கொண்டன. இஸ்ரேலிய விமானங்கள் கெய்ரோவுக்கு சுமார் 30மைல் தொலைவுவரைக்கும் ஊடுருவிச் சென்றதாக அறிவிக்கப்பட்டது. கெய்ரோ விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேலியர் முயன்றதாகக் கூறப்படுகின்றது.

அரபுக்குடியரசு விமானத்தளம் ஒன்றின்மீது இஸ்ரேலிய விமானங்கள் ஊடுருவமுயற்சி எடுத்ததாகவும் ஆனால் அவைகளைத் துரத்தியடித்துவிட்டதாகவும் அரபுக்குடியரசு அறிவித்தது.

## சிங்கப்பூர்கப்பலில் குழப்பம் மாசேதுங் படம் காரணம்

கராச்சி, ஜன. 8

சிங்கப்பூர் கப்பலொன்றை பாகிஸ்தான் அதிகாரிகள் சிட்டகொங் துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளனர். கப்பலின் மாலுமிகளுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து இந்தக்கப்பல் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது. கப்பலில் சில மாலுமிகள் மாசேதுங் படத்தை வைத்ததாகவும் இதனால் தகராறுஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. கப்பல் தளபதியையும் அதிகாரிகளையும் கலவரம் செய்தவர்கள் தாக்கினார்களாம். தளபதி சிங்கப்பூருக்கு விரைந்துள்ளார். கப்பலிலுள்ள சிங்கப்பூர் கொடியையும் கலவரக்காரர்கள் கிழித்தெறிந்தார்களாம்.

## நித்திரையில் இருக்கையில் வீடு இடிந்து விழுந்ததாம்

உடுப்பிட்டி, வியா

கரணவாய் தெற்கில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கடும் மழையினால் இரு வீடுகளே இடிந்து விழுந்துள்ளதாக கிராம சேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். தலையாட்டி என்னுமிடத்தில் மூன்றுபேர் நித்திரையில் இருக்கையில் வீடு இடிந்து வீழ்ந்ததாகவும், அயலவர்களும் அவ்வீட்டின் சொந்தக்காரரின் மூத்த புதல்வனும் சேர்ந்து வீட்டினுள் அகப்பட்டவர்களை மீட்டனராம்.

### தவணை நீடிக்கக் கோரிக்கை

கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் வடமராட்சிப் பகுதியில் வெங்காய உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நஷ்டமடைந்த விவசாயிகள் கூட்டுறவு மாகாண வங்கி தமக்கு வழங்கிய விவசாயக்கடனின் தவணையை நீடிக்க வேண்டுமென்று கோரியுள்ளனர்.

சுமார் 50 ஏக்கர் வெங்காயப் பயிர் இங்கு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வயல்களில் இன்னும் வெள்ளம்

கடும் மழை ஓய்ந்து சில தினங்களாகி விட்டபோதிலும் கரணவாய், கப்பூது, அந்தணன்திடல், கிராய் முதலி பகுதிகளிலுள்ள நெல் வயல்கள் வெள்ளத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றன. கடந்த வருடம் மழையின்மையால் பாதிக்கப்பட்ட நெற்செய்கை இவ்வருடம் அதிக விளைச்சலையுண்டு பண்ணிய மகிழ்ச்சியில் மூழ்கிய விவசாயிகள் இதனால் கவலை அடைந்துள்ளனர்.

நெற்கதிர்கள் அழுகியும், சாய்ந்தும் வெள்ளத்தில் மிதக்கின்றன. வடமராட்சியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட புகையிலை உற்பத்தி செய்த விவசாயிகள் வெள்ளம் ஏற்படுத்திய சேதத்தில் பெரும் நஷ்டமடைந்துள்ளனர்.

புகையிலைச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் இவ்வருடம் புகையிலைக்கு அதிக கிராக்கியும், கூடிய விலையும் இருக்குமென்று கருதப்படுகிறது.

## 'பயிர்நட்டமுற்ற விவசாயிகளுக்கு உடன் உதவுக'

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட 84 விவசாயிகளின் பயிர்கள் பெருமளவில் அழிந்துள்ளதினால் அவர்களுக்கு உடன் நிவாரணம் அளிக்கவேண்டும்' என்று மேற்படி சங்கம் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது.

கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. கனகசபை, அரசாங்க அதிபர், திரு பிரான்சிஸ் பீட்டர்ஸ் வலி வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் உட்பட மற்றும் கமத்தொழில் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் மேற்படி சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகள் பின்வருமாறு:-

கஷ்டங்களுக்கான விவசாயிகளின் பயிர் நஷ்டத்தை நேரில் பார்வையிட்டு உண்மையான விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்க அரசாங்கத்திடம் இருந்து நஷ்டஈடு பெற்றுத்தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இம்முறை கூட்டுறவு மாகாண வங்கியில் வெங்காயச்செய்கைக்கென சங்கம் 30 லட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்று அங்கத்தவர்களுக்கொடுத்திருக்கின்றது. இப்பணத்தை இம்முறை கட்டமுடியாத நிலையிலிருக்கிறோம். ஆகவே இதே வட்டியுடன் அடுத்த மார்கழிப் போக வெங்காயச் செய்கையிலிருந்து வங்கிக்குத் திரும்பக் கட்டுவதற்குக் காலநிலையை நீடித்துத் தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

இம்முறை இதுவரைக்கும் 84 அங்கத்தவர்கள் 26 ஏக்கர் காணியில் பயிரிட்ட வெங்காயமும் முக்கால் ஏக்கர் காணியில் பயிரிட்ட 30 அந்தர் உருளைக்கிழங்கும், மிளகாய் மற்றும் சிறு பயிர்களும் முற்றாக சேதமடைந்திருக்கின்றது. அங்கத்தவர்களின் பட்டியலும் பயிரிட்டதொகையும் அழிவு பற்றிய விபரமும் நிர்வாகத்தால் பரிசீலனைசெய்யப்பட்டு, சேதாரத்தைப் பார்வையிடும் உத்தியோகத்தரின் நடவடிக்கைக்கு சங்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி விவசாயிகளின் சேதத்தை பார்வையிட உதவியாக இருக்கும்.

ஆகவே மேற்கொள்ள வேண்டியநடவடிக்கைகளைக் கையாண்டு விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்க உடன் நிவாரணம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்:

## கிராமக்கைத்தொழில் நிபுணர் வருகிறார்

லண்டன், ஜன 8

கிராம கைத்தொழிற் துறையில் நிபுணத்துவம் பெற்றவரும், ஓய்வுபெற்ற பிரிட்டிஷ் வர்த்தகருமான திரு. ஏர்னஸ்ட் பேடர் அடுத்தவார இறுதியில் இலங்கைக்கு விஜயம்செய்யவிருக்கிறார். 79 வயது நிறைந்த திரு பேடர், பிரிட்டனிலுள்ள கிராமகைத்தொழில் பயிற்சி நிலையத்தின் காரியதரிசியாக கடமையாற்றி வருகிறார். இலங்கையில் துரிதமாக அபிவிருத்தியடைந்துவரும் கிராமகைத்தொழின் துறையில் முன்னேற்றம்பற்றி நேரடியாக பார்த்துச் செல்லவே அவர் இங்கு வருகிறார்,

ஜனவரி மாதம் 14-ம் திகதி தமது பாரியாருடன் இங்கு வரும்அவர், கொழும்பில் ஒருமாத காலம்வரை தங்கியிருப்பார். திரு. பேடர் இலங்கை வருவது இது ஐந்தாவது தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. பேடரின் அழைப்பின் பேரில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இரு இலங்கையர்கள் பிரிட்டனுக்கு விஜயம்செய்து பட்டு ஜவுளியில் வர்ணமிடும் தொழில் நுணுக்கங்கள்பற்றி பயின்றனர். இவர்கள் தாயகம் திரும்பியதும் தங்களது கிராமங்களில் ஜவுளியில் வர்ணமிடும் நிலையங்களை நிறுவினர். இப்பொழுது இத்தொழில் நிலையங்களில் 1000க்கும் மேற்பட்டோர் தொழிலாற்றி வருகின்றனர்.

திரு. பேடர் தம்முடன் பிளாஸ்டிக் தொழிற்துறை சம்பந்தமான நவீன உபகரணங்களைக் கொண்டு வருகிறார். பிளாஸ்டிக்கைக் கொண்டு உபயோகமான பொருட்களை உருவாக்கும் முறைகளை அவர் இலங்கையர்க்கு விளக்கிக் காட்டுவார்.

## தேவாலயத்துக்கு இலவச மின்சாரம்

பருத்தித்துறை, புதன்

வதிரி அர்ச் அந்தோனியார் தேவாலயத்துக்கு வேண்டிய சகல மின்சார வசதிகளையும் செய்துவைக்க வாலிபர்கள் முன் வந்துள்ளனர். மின்சாரத்திற்கு வேண்டிய சகல பொருட்களையும் தமது செலவில் வாங்கி, அவற்றைத்தாமே உரிய இடங்களில் பூட்டும் ஒழுங்கையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர். அநேகமாக அடுத்த மாத முடிவுக்குள் இதற்கான வேலைகள் [illegible]

## 'கருணாநிதியின் கேள்விகள் திணறவைக்குமாம்' முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் கூறுகிறார்

### நகைவியாபாரி கொலை வழக்கு

## மோட்டார் சைக்கிள் வாங்கியது பற்றி விளக்கம் தியேட்டர் மனேஜர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, வியா.

"முதலாம் எதிரியின் தகப்பனார் என்னிடம் வந்து தனது மகன் கண்டபடி செலவழிக்கிறார் என்று கூறியதோடு மகன் ஒரு மோட்டார்சைக்கிள் வாங்கி வைத்திருப்பதாகவும், அந்தச் சைக்கிளை எப்படி வாங்கினாரென்பதை அறிவதற்கு இன்ஸ்பெக்டர் செல்லையாவிடம் போய் விசாரிப்பதற்கு வரும்படியும் தம்மைக் கேட்டார்" என்று நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த லெட்சுமி தியேட்டர் மனேஜரான திரு. முருகேசு கந்தவனம் அல்லது ஐயா மாமா என்று அழைக்கப்படுபவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும் கடந்த வருடம் கார்த்திகை மாதம் பருத்தித்துறை நகை வியாபாரியான எம். எம். சுல்தான் என்பவரைச் சதி செய்து கொலைசெய்ததாக இரகசியப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டது.

கந்தவனம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் "சம்பவ காலத்தில் நான் லெட்சுமித் தியேட்டரில் ம[illegible]ஜராகக் கடமையாற்றி[illegible]ன். அந்நேரத்தில் முதலாவது எதிரியின் தகப்பனார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் செல்லையாவைச் சந்தித்து மகன் வாங்கிய மோ[illegible]ார் சைக்கிளைப் பற்றி விசா[illegible]க்க

### தமிழ்நாட்டுச் செய்திகள்

#### அமைச்சர் சண்முகம் போட்டி

சென்னை, ஜன 8

தமிழ்நாடு மேல்சட்ட சபைக்கு வடஆற்காடு மாவட்டம் ஊராட்சித் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் உணவு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் போட்டியிடவிருக்கிறார்.

0 0 0

#### கருணாநிதி அதிர்ச்சி

கேரள அமைச்சர் திரு. முகம்மது கோயா மீது வெடிகுண்டு வீசப்பட்டதாகக் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியடைந்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிகூறினார். கேரள மந்திரிக்கு தந்திச்செய்தியொன்றையும் திரு. கருணாநிதி அனுப்பிவைத்தார்.

0 0 0

#### மா[illegible]வர் முன்னேற்றக் கழகம்

மாணவர் முன்னேற்றக் கழகத்[illegible] முதலமைச்சர் திரு. மு. [illegible] அவர்கள் பி[illegible]வைப்பார், திராவிட மா[illegible]வர் முன்னேற்றக்

### பொலிஸாருக்கு பாராட்டு

மன்னார், வியாழன்

தாழ்வுபாடு கிராமத்தில் அண்மையில் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து அமைதியை நிலைநாட்ட மன்னார் பொலிசார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டும் தீர்மானமொன்று மன்னார் பட்டினசபையின் மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### நன்கொடை

அனுராதபுர பாதுகாப்

## செயற்கை கிரகம் மூலம் இந்தியாவில் டெலிவிஷன்

வாஷிங்டன், ஜன. 8

இந்தியாவில் 5 ஆயிரம் கிராமங்களில் டெலிவிஷன் காட்சிகளைக் காட்டுவதற்காக ஒரு செயற்கைச் சந்திரனை பறக்கவிட அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

இதற்கான ஒப்பந்தம் வாஷிங்டன் நகரில் கையெழுத்தாகியது.

கல்வி குடும்பக்கட்டுப்பாடு விவசாயம் சம்பந்தமான டெலிவிஷன் காட்சிகளை 5 [illegible]கப்படும்.

ஆமதாபாத் போன்ற நகரங்களில் டெலிவிஷன் நிலையங்கள் வைத்து டெலிவிஷன் நிகழ்ச்சிகளை ஒளி பரப்புவார்கள் அந்த ஒளி அலைகளை செயற்கை சந்திரனில் உள்ள கருவிகள் கிரகித்துக்கொண்டு மீண்டும் பூமிக்கு அந்த அலைகளை ஒளி பரப்பும். கிராமங்களில் உள்ள டெலிவிஷன் பெட்டிகளின் திரைகளில் சினிமாப் படம்போல அந்தக்காட்சிகள் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணறவைக்குமாம்

## முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் கூறுகிறார்

சென்னை, ஜனவரி 8

கருணாநிதி கேள்விகேட்டால் பதில் சொல்வது எப்படி என்று தெரியாமல் திணறியதுண்டு அப்படித் திக்குமுக்காடும் படியான கேள்விகளை அவர் கேட்டாரென்று முன்பு முதலமைச்சராகவிருந்த திரு. பக்தவத்சலம் கூறினார்.

சென்னை தங்கசாலையில் உள்ள அச்சகமொன்றில் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் உருவப்படத்தைத் திறந்துவைத்து அவர் பேசினார்.

திரு. பக்தவத்சலம் கூறியதாவது;-

எனக்கும் முதலமைச்சர் கருணாநிதிக்கும் கருத்து வேறுபாடு உண்டு ஒரே கட்சியிலுள்ளவர்களிடமே கருத்துவேற்றுமை முற்றிப் போய் இருக்கும் இந்தக் காலத்தில் வெவ்வேறு அரசியல் கட்சியிலுள்ளவர்களிடம் கருத்துவேறுபாடிருப்பது புதிதல்ல.

ஆனால் அந்தக் கருத்து வேறுபாடுகளை எங்கு வைத்துக் கொள்ளவேண்டுமோ அங்குதான் வைத்துக் கொள்ளவேண்டும். கொள்கையில் கருத்துவேறுபாடு இருப்பதற்காக ஒருவரை ஒருவர் பாராட்டிப் பேசக்கூடாதென்பது நாகரீக அரசியல் அல்ல

கருணாநிதி பல்வேறு பிரச்னைகளுக்கு நல்ல விதமான பரிகாரங்களைக்கண்டு வருகிறார். ஆனால் பொறாமை கொண்ட சிலர் பிரதமர் இந்திரா காந்தி தி. மு. க. அரசை விலை கொடுத்து வாங்கிவிட்டதாக பேசிவருகிறார்கள். இது கேவலமான ஆபாசமான குற்றச்சாட்டாகும்.

வறட்சி நிவாரணத்துக்காக டெல்லி பணம்கொடுத்ததை இப்படி திரித்துக் கூறுவது சரி அல்ல. ஒரு சிலர் கை தட்டுவார்கள் என்பதற்காக அவர்கள் இப்படி பேசுகிறார்கள். தமிழ் நாடு தன் திறமையை இந்தியாவுக்கு காட்டும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

இங்கு என்னை பாராட்டி பக்தவச்சலம் பேசினார். நான் முதல்-அமைச்சர் ஆவதற்கு முன்பு எதிர்க்கட்சியில் இருந்த போதும் அவர் என்னைப்பாராட்டினார் என்பது முழுக்க முழுக்க உண்மை.

சட்டசபையில் ஒரு நாள் அவர் நகைசுவையை எல்லாராலும் கையாண்டுவிட முடியாது. அதை கருணாநிதிதான் கையாள வேண்டும் என்று குறிப்பிட்டது எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது.

நான் பொது வாழ்க்கையை பெரியாரிடமும், அரசியல் வாழ்க்கையை அண்ணாவிடமும் சட்டசபை பயிற்சியை பக்தவச்சலத்திடமும் பயின்றேன்.

அவரிடம் தேவையான நேரத்தில் யோசனைகளும் நான் கேட்பதுண் . அவரும் யோசனைகளை கூறிவருகிறார். இதற்காக அவருக்கு என் நன்றியை தெரிவித்துகொள்ளுகிறேன்.

# ஐரோப்பாவை ஆசியாவுடன் இணைக்கும் தொங்குபாலம்

லண்டன், ஜன. 8

ஐரோப்பாக் கண்டத்தை ஆசியாவுடன் இணைக்கும் மிகப் பிரமாண்டமான தொங்கு பாலம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைகள் சீக்கிரம்ஆர்ம்பிக்கப்படவிருக்கின்றன. துருக்கியிலுள்ள பொஸ்பரஸ் நதி மீதாக கட்டியெழுப்பப்படவிருக்கும் இந்தப்பாலம் ஐரோப்பாவிலேயே மிக நீண்டதாக விளங்கும்.

பிரபல பிரிட்டிஷ், ஜெர்மன் பொறியியல் நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து சுமார் 140 லட்சம் பவுண்கள் செலவில் இந்ததொங்கு பாலத்தை நிறுவுகின்றன. கிளிவ்லண்ட் எனப்படும் பிரிட்டிஷ் பொறியியல் கம்பனி இப்பால அமைப்பில் 80 விகிதமான செலவை பொறுப்பேற்கும்.

இந்த தொங்கு பாலத்தின் நீளம் 5,320 அடியாகும். பொஸ்பரஸ் நதிமீதாக 210 அடிஉயரத்தில் இப்பாலம் கட்டியெழுப்பப்பட விருப்பதால், பாலத்தின் கீழாக பெரிய கப்பல்கள் போக்குவரத்து செய்ய முடியும். 3 வருடகாலத்தில் அதாவது 1973ம் ஆண்டளவில் இத்தொங்குபாலம் பூரணமாக கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1973ம்ஆண்டு இப்பாலம் திறக்கப்பட்டதும் இதன் மீதாக ஆண்டுதோறும் 80 லட்சம் வாகனங்கள்வரை போக்குவரத்துசெய்யுமென நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தமது செலவில் வாங்கி, அவற்றைத்தாமே உரிய இடங்களில் பூட்டும் ஒழுங்கையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர். அநேகமாக அடுத்த மாத முடிவுக்குள் இதற்கான வேலைகள் முற்றுப் பெறுமெனத் தெரிகிறது.

## போலிமருந்து விற்றாராம் வழக்கு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, வியா

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். ஜே. சத்தியநாதன் என்பவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த சபாபதி கனகசபையின் கடைக்கு கடந்த வருடம் கார்த்திகை மாதம் 6-ந் திகதி சென்றுதான் கொழும்பில் இருக்கும் ஓர் கம்பனியின்பிரதிநிதியென்றும் தன்னிடம் கிருமிநாசினிமருந்து விற்பதற்கு இருப்பதாகச் சொல்லி போலிமருந்தை ஏமாற்றி விற்றதாக அவருக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது மாஜிஸ்திரேட் மருந்துப் போத்தலை பரிசோதனைக்கு கொழும்புக்கு அனுப்பவும் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லவும் உத்தரவிட்டு விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

எதிரி சார்பில் திரு. வி. பி. சுந்தரலிங்கம் ஆஜரானார்.

## இடமாற்றம்

மண்டைதீவு, வியாழன்

வடபகுதி தபால் தந்தி அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றிவந்த உப தபால் அலுவலக பொறுப்பாளர் திரு. றெஜி எட்வேட் இம்மாதம் 3ம் திகதி முருங்கன் தபால் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

## 'சிறந்த சாதனை'

சித்தன்கேணி, வியாழன்

''அரசாங்கம் மற்றும் ஊராட்சிமன்றங்களின் உதவியை எதிர்பாராமல், மக்கள் தமது தேவைகளைத் தாமே பூர்த்திசெய்வதற்குச் சிரமாதானப் பணி சிறந்த சாதனமாகும்.''

சிவன்கோவிலடி, கலைநகர் மக்கள் தமது பகுதித் தெருக்களை விஸ்தரிக்கும் சிரமதான வேலையில் ஈடுபட்டபோது இதனைப் பாராட்டிப் பேசிய வட்டுக்கோட்டை ஊர்மன்றத் தலைவர் திரு. நிற்சிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## மாணவர் முன்னேற்றக் கழகம்

மாணவர் முன்னேற்றக் கழகத்தை முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி ஆரம்பித்துவைப்பார். திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு சென்னை எழும்பூர் பெரியார் திடலில் இம்மாதம் 24, 25 திகதிகளில் நடைபெறும் மாநாட்டுக்கு கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் தலைமை வகிப்பார். மாநாட்டையொட்டி சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

0 0 0

## அமைச்சரிடம் திருட்டு

தமிழ் பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசனிடம் ஓடும் ரயிலில் திருட்டு நடந்தது. திருவனந்த பிரயாணிகள் ரெயிலில் முதல் வகுப்பு பெட்டியில் பிரயாணம் செய்த அமைச்சர் தமது சட்டையை தனியாக ஒரு இடத்தில் மாட்டியிருந்தார். ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே யாரோ ஜன்னல் கதவைத் தூக்கி சட்டையை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

இந்தத் திருட்டுப் பற்றி அமைச்சர் நடராஜன் நிருபர்களிடம் பேசுகையில், ''நல்லவேளையாக நான் என் மணிபார்சை சட்டைப் பைக்குள் வைத்திருக்கவில்லை. இதனால் திருடன் நன்றாக ஏமாந்து போனேன்'' என்றார். இதே ரயிலில் முன்னர் அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையாரின் கைப்பை களவு போயிற்று.

0 0 0

## சாக்கு மூடையில் வாலிபரின் பிணம்

கள்ளக்காதல் சம்பந்தமாகக் கொலைசெய்யப்பட்டவர் என்று கருதப்படும் வாலிபரின் பிணம் சாக்கு மூடையில் கட்டப்பட்டு கிணற்றில் மிதந்து கொண்டிருந்தது. இதுசம்பந்தமாக இருவரை பொலிசார் கைது செய்தனர். திருக்கோயிலூர் அம்மன் கொல்லை மேடு கிராமத்தைச் சேர்ந்தவரான சிங்காரம் என்ற இந்தவாலிபருக்கு வயது 22.

0 0 0

## திருமண ஏக்கம்

திருமண ஏக்கத்தினால் ஓர் இளம் பெண் கிணற்றில் விழுந்து தற்கொலை புரிந்து கொண்டார். அம்பு ஜாட்சி என்ற 21 வயதான இப்பெண்நீண்ட நாட்களாகவே தனக்கு திருமணம் ஆகவில்லையென்று கவலைகொண்டிருந்ததாகவும் அதனால் தெப்பக்குளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகவும்கூறப்படுகின்றன.

...ராகக் கடமையாற்றினேன். அந்நேரத்தில் முதலாவது எதிரியின் தகப்பனார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் செல்லையாவைச் சந்தித்து மகன் வாங்கிய மோட்டார் சைக்கிளைப் பற்றி விசாரிக்க வரும்படி கேட்டார். இன்ஸ்பெக்டரும் நானும் சிநேகிதர் என்பறபடியால் ஒருநாள் நானும் முதலாம் எதிரியின் தகப்பனார் சபாரத்தினமும் அவரைப் போய்ச் சந்தித்தோம். தனது மோட்டார் சைக்கிளை மூன்றுபேர் வந்து பார்த்து. அதில் ஒருவருக்கு அச்சைக்கிள் வாங்கிக் கொடுக்கப்பட்டது என்றும் சொன்னார். சைக்கிள் பெறுமதி ரூபா 2200 என்றும், அதற்கு ரூபா 2000 கொடுக்கப்பட்டதாகவும், மிகுதிக் காசுக்கு ஒரு கை மணிக்கூடு பொறுப்பாகக் கொடுக்கப்பட்டதாகவும், மிகுதிக் காசு தந்துவிட்டு, மணிக்கூட்டையும், சைக்கிள் பரிமாறப்படும் துண்டையும் வாங்குவதாகச் சொல்லிவிட்டுப் போனதாகச் சொன்னார். பின்னர் வேறொரு நாள் முதலாம் எதிரியையும் கூட்டிக்கொண்டு இன்ஸ்பெக்டர் செல்லையாவிடம் சென்று காசு 200 ரூபாவையும் கொடுத்து மணிக்கூட்டை வாங்கிக்கொண்டு முதலாம் எதிரியின் அனுமதியுடன் மோட்டார்சைக்கிளை எதிரியின் தகப்பனார் பெயரில் மாற்றினோம். முதலாம் எதிரியின் தகப்பனார் நேர்மையான தட்டாரத் தொழில் செய்பவர்'' என்று அவர் கூறினார்.

செல்லையா லோகேஸ்வரன் மொகமட் அப்துல்காதர் ஆகியோர் சாட்சியமளித்த பின் மேல் விசாரணை இம்மாதம் 12ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

லண்டன் ஜன, 7

கைத்தொழில் துறையிலும் தொழில்நுடபத்துயையிலும் உலகத்தில் ஏற்படடு வரும் முன்னேற்றம் மனித சமுதாயத்துக்கு ஒரு அழிவைத் தரக்கூடியதாகஅமைந்துள்ளதாக பாப்பரசர் போல் இன்று அச்சம் தெரிவித்தார், ரோமாபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர்பேசுகையில் இவ்விதம் சொன்னார்.

## சிறந்த அரசு

'ஒரு சிறந்த அரசைத் தெரிவு செய்வது மக்களுடைய பொறுப்பென்றும், அவர்கள் தம்பொறுப்பைச் சரிவரச் செய்யாததனால் தான்தீய அரசுகள்தோன்றி நாட்டைபாழ்படுத்துகின்றன வென்றும் எல்லைக் காந்தி மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

...பட்டினசபையின் மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## நன்கொடை

அனுராதபுர பாதுகாப்புச் சபையின் கிழுள்ள நகர சபைத் தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் சம்பளத்தில் ரூ. 5 வீதம் கழித்து வெள்ள நிவாரணத்திற்கு உதவி புரிய சபைக்குக் கைச்சாத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் 1000 ரூபாவிற்கு மேற்பட்டதொகை கிளையின் சார்பாக வழங்கப்படும் என்று ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. ஆர். செல்லையா அறிவிக்கிறார்.

## வளர்மதி

முள்ளியவளை, வியா.

முள்ளியவளை வளர்மதி மன்றத்தின் சிறப்புப் பொதுக் கூட்டமொன்று 6-ம் திகதி மாலை மன்றச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு. க. கந்தசாமி தலைமை வகித்தார்.

பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் உளளூராட்சி மன்றக் கலை விழாவையொட்டி மன்றச் சார்பில் படிப்பகம் திறத்தல். நாடகம், இசை, நடனம் கருத்தரங்கு முதலியவற்றில் பங்கு பற்றுதல். சிரமதான மூலம் கந்தர் வீதியைத் திருத்துதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(8-ம் கலத் தொடர்ச்சி)

தார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைத்துத் தருவதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிவருவது ஒரு கண்துடைப்பாகும் அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்குப் பல்கலைக்கழகம் கிடைக்க மாட்டாதென்பதை திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். இன்னும் சிறிது காலம் தங்களது பதவிகளைக் காப்பாற்றுவதற்காக ஒரு செப்படி வித்தையாகவே பல்கலைக்கழக விடயத்தை தமிழ் மக்கள் மத்தியில் கூறிவருகின்றார்கள்என்றார் தீவுப்பகுதி தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணிச் செயலாளர் திரு. திருநாவுக்கரசு பேசுகையில், உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தீவுப்பகுதி தொகுதியின் முடிவைப் பற்றி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்.

...ருக்கின்றது.

இதற்கான ஒப்பந்தம் வாஷிங்டன் நகரில் கையெழுத்தாகியது

கல்வி குடும்பக்கட்டுப்பாடு விவசாயம் சம்பந்தமான டெலிவிஷன் காட்சிகளை 5 ஆயிரம் இந்திய கிராமங்களில் காட்டுவதற்கு அமெரிக்கா உதவிபுரிய முன்வந்திருக்கிறது.

1972-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அமெரிக்கா ஒரு செயற்கைச் சந்திரனை பூமியைச் சுற்றிப் பறக்கவிடும். டெலிவிஷன் நிகழ்ச்சி அலைகளை கிரகித்துக்கொண்டு மீண்டும் அந்த அலைகளை ஒளிபரப்பக்கூடிய கருவிகள் அந்த செயற்கை சந்திரனில் வைக்...துக்கொண்டு மீண்டும் பூமிக்கு அந்த அலைகளை ஒளி பரப்பும். கிராமங்களில் உள்ள டெலிவிஷன் பெட்டிகளின் திரைகளில் சினிமாப் படம்போல அந்தக்காட்சிகள் தெரியும்.

குடும்பக்கட்டுப்பாடு, விவசாயம் தேசஒற்றுமை ஆகியவற்றை பிரசாரம்செய்வதற்கான டெலிவிஷன் நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

செற்கை சந்திரன் மூலம் டெலிவிஷன் காட்சிகளை நேரிடையாக கிராமங்களுக்கு அனுப்புவது இதுவே முதல் தடவை என்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவர் கூறினார்.

# 'காந்திஜியின் பாதையில் கப்புதூ கிராமம் செல்கிறது'

## அரசாங்க அதிபர் பெருமிதம்

பருத்தித்துறை, தன்

''கிராமமக்கள் தங்கள் சொந்த முயற்சியால் வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளில் தன்னிறைவு காணவேண்டுமென்பது உலகம் போற்றும் உத்தமர் காந்தியின் இலட்சியக் கனவாக இருந்து வந்தது இந் நாட்டிலுள்ள சகல கிராமங்களும் பெரு முயற்சியால் முனனேறினால் நாம் பிற நாட்டைஎதிர்பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது. அத்துடன்சமுதாயத்தில் களவு கொலை போன்ற சாபக்கேடுகளையும் ஒழித்துக் கட்ட முடியும். அரசியல் பூசல்களுக்கு அப்பாற்பட்டுச் சகோதர உணர்ச்சியுடன் ஒற்றுமையாக வாழ முடியும் காந்தியின் இலட்சியக் கனவுப் பாதையில் ஏறு நடை போட்டுச் செல்லும் கப்புதூ கிராமத்தை இனிக் காந்திக் கிராமம் என அழைப்பதே பொருந்தும்''

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. எவ். சீ. பீற்றர்ஸுக்கு பருத்தித்துறைக்கும் சாவகச்சேரிக்கும் இடைப்பட்ட கப்புதூ என்னும் கிராமத்தில் கிராம முன்னேற்றச் சங்கம், காந்திய சேவா சங்கம், பயிர்ச் செய்கைக்குழுக்கள் ஆகியனவற்றால் அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளிக்கையில் அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

கிராம முன்னேற்றத்திற்காக வீதிகள் அமைப்பதற்கும், கால்நடைகள் வளர்ப்பதற்கும்வீட்டுத் தோட்டங்கள் உருவாக்குவதற்கும் விஞ்ஞான ரீதியிலான பாற்பண்ணைகள், கோழிப் பண்ணைகள் நிறுவுவதற்கும் மாதர் சங்கங்களின் ஆதரவில் இயங்கக் கூடிய நெசவு தையல் நிலையங்கள் அமைப்பதற்கும் அரசாங்கம் ஆதரவு அளித்து வருவதாகக் கூறிய அரசாங்க அதிபர் இவற்றைப் பெற்றுக் கிராமத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்றும் கூறினார்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் நன்றியுரை கூறினார்.

# 'தமிழ்ப்பகுதிக்குப்பல்கலைக்கழகம் இடைக்கவே மாட்டாது' — பண்டிதர்

அல்லைப்பிட்டி, வியா

'இன்று தமிழ்மக்கள் சிங்களவரினால் பல வழிகளாலும் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட ஏமாற்றங்களை எடுத்தெறிவதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து புதுவிதமான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அப்படிப்பட்ட போராட்டத்தின் மூலமே நமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் இதனை தனிப்பட்டவர்களினாலோ அன்றி தனிப்பட்ட கட்சிகளினாலோ செய்யமுடியாத காரியமாகும்'

மேற்கண்டவாறு புங்குடுதீவு சிவலைப்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கிளிநொச்சிப் ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்

(6-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

விவேகமில்லாமல் ஆட்சியை எதிர்ப்பதனுல் அராஜகமும் கட்டுப்பாடின்மையும் தான் தோன்றிப் போக்கும் உருவாகிவிடும் சமுதாயத்தின் கைகளாலேயே அதற்கு அழிவு ஏற்பட்டு விடும்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 25-ந் திகதி (9-1-70)


## வகுப்புவாத பிரசுரங்கள்

வகுப்புவாதத்தைத் தூண்டிவிடக்கூடிய ஆபத்தன அநாமதேயத் துண்டுப்பிரசுரங்கள் இராணுவத்தினர் மத்தியில் விநியோகிக்கப்படுவதாகவும் சிங்களவரல்லாத இராணுவத்தினருக்கெதிராக சிங்கள இராணுவத்தினர் ஒன்றுசேர வேண்டுமென இத்துண்டுப் பிரசுரங்களில் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஒருபத்திரிகைச்செய்தி கூறுகிறது. இத்துண்டுப் பிரசுரங்கள் சிலவற்றை தாம் பார்த்ததாகவும் இவை வெளியாரினுல் விநியோகிக்கப் பட்டிருப்பதாகத் தாம் நம்புவதாகவும் இராணுவத்தளபதிகூறியிருக்கிருர். எனவே இராணுவத்தினர் மத்தியில் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடக்கூடிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டிருக்கிறதென்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இராணுவத்தளபதி கூறுவதுபோல் வெளியார் தான் இந்தத் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதாக வைத்துக்கொண்டாலும் இதற்கு உடனடியாக முற்றுப் புள்ளிவைத்து இராணுவத்தின் கட்டுப்பாட்டையும் நாட்டின் பாதுகாப்பையும் நிலைநாட்டவேண்டியது மிக மிக அவசியமாகும்.

இராணுவத்தினர்மத்தியில் இராணுவ முகாம்களில்வெளியார் சில துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்க முடியுமானுல் இராணுவ இரகசியங்களையும் நாட்டின் பாதுகாப்புப் பற்றிய இரகசியங்களையும் வெளியார் அறிந்துகொள்வது கடினமான காரியமாக இருக்கமாட்டாதென்பது தெளிவு. வெளிநாட்டாரின் ஆக்கிரமிப்பு அபாயம் நமது நாட்டுக்கு இல்லையென்ருலும் கூடஇராணுவம் ஒன்றுஇருப்பதே நாட்டின் பாதுகாப்புக்காகத்தான் என்பதைமறுக்க முடியாது. இராணுவ முகாம்கள் ஒவ்வொன்றின் வாயிலிலும் இராணுவச் சிப்பாய்கள் துப்பாக்கி ஏந்திய வண்ணம் காவல் புரிகின்றனர்.

ரணத்துங்கா பேசியதாக ஒரு செய்தியை பெரிய தலைப்பில் பிரசுரித்திருந்தது 'எங்கள் குழந்தைகள் அடிமைகளாக வேலைசெய்ய வேண்டி நேரக்கூடிய சிறுபான்மையினரின் கைகளிலிருந்து நமது தாய்நாட்டைப்பாதுகாப்பதற்கு, ஒவ்வொரு சிங்கள மகனும் சாதி,மத வேறுபாடுகளை மறந்து ஒரே சமூகமாக ஒன்றுசேராவிட்டால் இன்னும் சில வருடங்களில் ஓர் உள்நாட்டு யுத்தத்துக்குத் தயாராகவேண்டியேற்படும்' என்று கொத்மலை எம். பி. பேசியிருப்பதாக அந்தச் செய்தி குறிப்பிடுகிறது.

இதுசாதாரணமாக நமது நாட்டு அரசியல்வாதிகள் பலரும் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கத்துடன் பேசும் 'தேர்தல் பேச்சு'என்று ஒதுக்கிவிடக்கூடியதுதானென்ருலும் இத்தகைய பேச்சுக்களும் பிரசாரங்களும்தான் இராணுவத்தினர் மத்தியிலும் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடக்கூடிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதற்கும் அங்கும் வகுப்புவாதம் தலைதூக்குவதற்கும் காரணமாய் அமைந்துவிடுகின்றனவென்பதைக்கவனத்தில் கொள்ளவேண்டும்.

தேசியஐக்கியத்தை நிலைநாட்டி நாட்டை முன்னேற்ற வேண்டுமென்ற ஆர்வத்துடன் உழைப்பதாகக் கூறிக்கொள்ளும் இந்த அரசாங்கம் இது விஷயத்தில்உடனடிக்கவனம் செலுத்தவேண்டியதுடன்வட பகுதியில் முன்னர் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அரசாங்கத்துக்கெதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டோரை அடக்குவதற்காக இப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட இராணுவத்தினர்வெளிப்படையாகஅவர்கள் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றவில்லையென்பதையும் இப்பகுதிபொதுமக்கள் தொடர்ந்து நிம்மதியாக

இன்று சேர் பொன். அருணுசலம் நினைவுதினம்

# தேசீய எழுச்சிக்கு வித்திட்ட வீரர்

'அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் இலங்கை முன்னேற வேண்டுமென்ற நோக்கத்துடன் சிங்களப் பிராந்தியங்களில் மக்கள் சங்கங்களை அமைப்பதற்காக இன்று நாம் கூடியிருக்கிருேம். தமிழ்ப் பகுதிகளிலும் விரைவில் இப்படி ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்படும். போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் வருவதற்கு முன்புசிங்களவரும்தமிழரும் அநாகரீகமான காட்டுமிராண்டிகள் போல வாழவில்லை. நீங்கள் பச்சைக குழந்தைகள் அல்ல. உங்கள் நாகரீகம் 2000 வருடங்களுக்கும் அப்பாற்பட்டது. இக்காலத்து நாகரீகமான மேற்கத்தைய நாடுகள் அஞ்ஞானத்தில் அமிழ்ந்திருந்தபோது நீங்கள் மிகவும் பண்பட்ட அரசியல், சமூக வாழ்க்கை நடத்தியிருந்தீர்கள். இலக்கியத்தையும் கலைகளையும் வளர்த்தீர்கள். பிரமாண்டமான அழகியகோயில்களைக் கட்டினீர்கள். சிறந்த ஓர் அரசுக்கு வேண்டிய இராணுவத்தையும் கடற்படையையும் வைத்து ராஜ்ய பாரம் செய்தீர்கள்''

இலங்கை மக்களின் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் முறையில் 1919-ம் ஆண்டு செப்டம்பர் இருபதாம் திகதி, சேர் பொன்னம்பலம் அருணுசலம் இவ்வாறு சிங்கள தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் சேர்ந்து கூட்டிய ஒரு மகாநாட்டில் வீரமுழக்கம் செய்தார். சிங்களவர், தமிழர், சோனகர் என்ற வேறுபாடுகள் இல்லாமல் எல்லோரும் இலங்கையரே என்ற அடிப்படையில் சுதந்திரக் கிளர்ச்சி நடத்திய காலம் அது. இக் கிளர்ச்சிக்கு முன்னணியில் நின்று பாடுபட்டவர்கள் ஈழநாடு பெற்றெடுத்த இரு தவப்பெரும் புதல்வர்கள் சேர் பொன் இராமநாதனும் அவருடைய தம்பியார் சேர் பொன் அருணுசலமும்.

### தலைவரி, உப்புவரி

இலங்கையின் சிவில் சேவையிலிருக்கும் போதே சேர். அருணுசலம் நிர்வாகத் துறையிலும் நீதித் துறையிலும் சிறந்து விழங்கிய தாடல்லாமல் ஏழை பொதுமக்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றும் விரும்பி அவர்களுக்காகப் பரிந்து பேசினுர். பொது மக்களுக்கு தலைவரி விதிப்பதன் அநியாயத்தை சுட்டிக் காட்டி கவர்ணர் சாமேர்ஸ் பிரபுவுக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றில், 'தேயிலை. ரப்பர் தோட்ட முதலாளிகள் சொகுசுப் பொருட்களிலே தங்கள் பணத்தை விரயம் செய்து குபேர வாழ்க்கை நடத்த, ஏழை மக்கள் தலைவரியும் உப்பு வரியும் கட்ட வேண்டியிருக்கிறதே' என்று வருந்திஞர்.

பொது மக்கள் கல்வி, குடியிருப்பு வைத்திய வசதி முதலியவற்றில் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்துடன், சேர் ஜேம்ஸ் பீரிஸுடன் சேர்ந்து 1915-ம் ஆண்டில் இலங்கை சமூக சேவா சங்கத்தை ஸ்தாபித்தார்'

### தொழிலாளர் சேமலாப சங்கம்

மிகவும் உயர்ந்ததோர் குடும்பத்தில் பிறந்து சொகுசான வாழ்க்கை நடத்தக் கூடியவராயிருந்தும், தொழிலாளி வர்க்கத்தை மேம்படுத்துவதில் அவர் மிகவும் அக்கறை காட்டி, இலங்கையின் முதலாவது தொழிலாளர் சங்கமாகிய தொழிலாளர் க்ஷேமலாப சங்கத்தை 1919-ம் வருடத்தில் ஸ்தாபித்தார், இவர் ஆரம்பித்த தொழிலாளர் சங்கங்கள் ஒன்று சேர்ந்தே 1920-ம் வருடத்தில் இலங்கை தொழிலாளர் சம்மேளனம் உருவா[illegible]யது.

1[illegible]6-ம் ஆண்டிலேயே சேர் அருணுசலம் உத்தியோக அங்கத்தவராக சட்டசபைக்கு நியமனம் செய்யப்பட்டார். பின்னர் 1912 இல் கவர்ணர் மாக்கலம் அவரை நிர்வாக சபைக்கும் நியமனம் செய்தார்.

### இலங்கை தேசிய காங்கிரஸ்

1913 இல் அவர் சிவில் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு தமது முழு நேரத்தையும் ஆற்றலையும் அரசியல் போராட்டத்துக்கு அர்பணம் செய்தார். இலங்கையின் அரசியல் சட்டத்தை திருத்தி அரசாட்சியில் இலங்கைக்கு கூடுதலான பங்கு அளிக்கப்பட வேண்டுமென்று பொது மேடைகளிலும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதங்களிலும் இடைவிடாது பிரசாரம் செய்து வந்தார்.

### [வி என். பி.]

1917-ம் ஆண்டு மே மாதம் இலங்கை சீர்திருத்த சங்கம் அவருடைய தலைமையில் ஸ்தாபிதமாகியது. இதுவும் சேர். இராமநாதனுல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கமும் ஒன்று கூடி ஒரு மகாநாட்டை கூட்டின. இது போன்ற ஒரு பெரிய மகாநாடு முன்னெப்போதும் இலங்கையில் கூட்டப்படவில்லை. இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து பிரதிநிதிகள் வந்தார்கள். இம்மகாநாட்டில் சேர் அருணுசலத்தின் யோசனைக் கேற்ப இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாகியது. அதன் முதலாவது தலைவராக சேர். அருணுசலமே தெரிவு செய்யப்பட்டார். தேசிய காங்கிரஸின் மூலம் பிற்பாடு இலங்கை அரசியல் சட்ட[illegible]தில் பல முன்னேற்றமான [illegible]ருத்தங்கள் செய்யப்பட்டன.

### ஆத்மீக வாழ்வு

அரசாங்கத்தில் உயர்பதவி வகித்து, மேஞட்டு நாகரிகச் சூழலில் வாழ்ந்த ஒருவர் தமது தாய் மொழியிலும் சமயத்திலும் எவ்வளவு ஈடுபாடு காட்டிஞர் என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது. சேர். அருணுசலம் ஒரு நாளாவது சைவத்தையும் தமிழையும் மறக்கவில்லை. இந்த வழக்கம் அவருக்குத் தேட்டமாகக் கிடைத்தது, சின்னஞ்சிறு வயதிலேயே அவருக்குக் கடவுள் பக்தியையும், ஆத்மீக அறிவையும் ஊட்டியவர் அவரது பாட்டியாரான விசாலாட்சி அம்மையார். இந்த அம்மையார் வருடந்தோறும் கொழும்பிலிருந்து கால்நடையாக கதிர்காகயாத்திரை போவாராம்.

ஞானவாசிஷ்டம், திருமுருகாற்றுப்படை, தாயுமானவர் பாடல், திருவாசகம், தம்மபதம் முதலிய சமய நூல்களை அவர் ஆங்கிலத்தில்பிரமிக்கத்தக்க முறையில் மொழிபெயர்த்து தொகுத்து வெளியிட்டிருப்பது அவருடைய தமிழ்ப் புலமையை மட்டுமன்று ஆங்கிலம், சமஸ்திருதம், கிரேக்கம், பிரேஞ்சு முதலிய மொழிகளிலுள்ள புலமையையும் சிறப்பாக விளக்கிக் காட்டுகிறது.

தமது ஆத்மீக குருவாகிய தஞ்சாவூர் அருள்பரானந்த தேசிகரிடம் சேர் அருணுசலம் அத்யந்தபக்தி கொண்டிருந்தார் புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலேயே தாம் உயிர் நீக்க வேண்டுமென்று நினைத்து அவ்வாற 1924-ம்ஆண்டு ஜனவரி 9-ம் திகதி மதுரையிலுள்ள ஒரு சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார்

# முப்பெருந்துறைகளின்

## ஜயாரன் எழுதுவது

இந்திய ஜனதிபதி வி. வி. கிரி அவர்கள் கேரளத்திலே கவர்னராக இருந்தபோது, அங்குஒருமலிவுசாப்பாட்டுக் கடையின் ஆரம்ப விழா நடைபெற்றதாம். ஓட்டலில் ஒருசாப்பாடு சுமார் இரண்டு ரூபாவரை விற்றபோது, 40 நயாபைசா (40 சதம்)வுக்கு ஓர் அளவு சாப்பாடு அளிக்க கேரள அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அந்தக்கடையை ஆரம்பித்த திரு. கிரி அவர்கள், அந்த எளிய சாப்பாட்டை சாப்பிட்டதாயும், கவர்னராக இருந்தாலும், அவர் பல வகையிலும் மிக எளிய வாழ்க்கையே வாழ்வதாயும் ஒரு கேரள அன்பர் தெரிவிக்கின்ருர்.

மைசூரிலும் கூட அவர் கவர்னராக இருந்துள்ளார். அங்கு ஒரு கலைவிழாவுக்கு ஸ்ரீமதி சரஸ்வதி கிரி அவர்கள் வந்திருந்ததாயும் அவர் 15 ரூபாய் மதிப்புள்ள வாயல் புடவையே கட்டி வந்ததைக் காண பலரும் வியப்படைந்ததாயும் அந்த அன்பர் கூறுகிருர்.

எளிய தொழிலாளரின் உற்ற நண்பர்களான கிரி தம்பதிகள், இப்படி எளிய முறையில் வாழ்வதில் வியப்பில்லை. திருமதி கிரி அவர்கள் சாப்பாட்டிலே வெங்காயம், பூண்டு இவற்றையும் பாவிப்பதில்லையென்றும், இரவில் சொற்ப பலகாரமே செய்வாரென்றும் தெரிகிறது. இத் தம்பதிகளின் எளிய வாழ்க்கை இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் பலருக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

0 0 0

செனேட்டர் எஸ். நடேசன் அவர்கள் இலங்கை வழக்கறிஞர் சங்க (Bar Council) த்தலைவராகத்தெரிவு செய்யப்பெற்றதற்காக அவரைப்பாராட்டுகிருேம். திறமையும், அனுபவமும், நேர்மையுமுள்ள அவ்வித ஒருவர் தலைவராகக் கிடைக்க முடிந்தது அச்சங்கத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கே நல்லதாகும்.

இலங்கையிலே நீதி பரிபாலனம் மிக மேலாக இருக்கிறதெனினும், ஏழைமக்களுக்கு இவ்விஷயமாகவுள்ள சங்கடங்களை விளக்கத்தேவையில்லை. நீதிமன்றங்களுக்குச்சென்று வழக்காடி நீதி பெறுவதற்காகும் செலவையும், காலத்தையும் [illegible] கிரத்தில்நீங்கும்முறையிலே, அச்சங்கத்தார் புதிய தலைவரின்கீழ் தக்கமுயற்சிகளைச் செய்து இலங்கையின் மதிப்பை சர்வதேச அரங்கில் உயர்த்துவரென்றே நம்புவோம.

0 0 0

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்திலே காஞ்சி மெய்கண்ட சந்தானத்துக்குருமகா சந்நிதானம் அவர்கள் நடத்தி வரும் சிவஞான சித்தியார் வகுப்புக்குச் சென்று கேட்டேன். சைவ சித்தாந்த மென்றல் இரும்புக் கடலையை மெல்லுவதுபோல் அவ்வளவு கடினமென்பர். ஆனுல் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் போர்டுபலகையில் எழுதிவிளக்குவது சாதாரண மக்களுக்கும் எளிய முறையில் இதைப் புரியவைப்பதாக உள்ளது. இவ்விதமான முறையில் விளக்கம் கூறக்கூடியயாரும் தமிழகத்திலிருந்துஇதுவரை வரவில்லை என்றும், இவர்களை மூன்னும் இரண்டொரு மாதங்களுக்கு இங்கேயே இருக்கச்சொல்லி பாடம் கேட்பது சிறப்பாக சைவ சமயபாட ஆசிரியர்களுக்கு மிக உதவியாகஇருக்குமென்றும் பலரும்உணர்கின்றனர். விஸா அதிகாரிகளின் சித்தம் எப்படியோ!

தமிழகத்திலே இப்பாடங்களைக் கேட்க ஆள்கிடையாதாம். அதனுல்தான் ஈழத்துக்குவந்து பாடம் சொல்லுவதாகவும், சுவாமிஅவர்கள் தெரிவித்தார்கள்!

அந்த வகுப்புக்கு யாரார் வருகிருர்கள் தெரியுமா! கொக்குவில் குமாரசுவாமி புலவர், வட்டுக்கோட்டை நாகலிங்கத்தார், நைனை பிரம்மஸ்ரீ கைலாசநாத குருக்கள், முதலியார் முத்துத்தம்பி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உள்ளிட்டு பலஆசிரியர்களும்லந்து பாடம் கேட்டுப் பெரிதும் பயனடைகின்றனர்.

இதன் மதிப்பைமேலும் விளக்கவேண்டுமா? சைவ சமயத்தை சைவமாணவர்களுக்குக் கட்டாயமாக்கியுள்ளனரெனினும், அதைப் படிப்பிக்க, தக்க ஆசிரியர்கள் இல்லையென்பது பகிரங்க ரகசியம். சைவசமய சாஸ்திரங்களை முறையாகக கற்க இங்கு ஆசிரியர்களுக்கு ஏதுவாய்ப்பு? ஈழத்து சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நாட்டின் பாதுகாப்புக் காகத்தான் என்பதைமறுக்க முடியாது. இராணுவ முகாம் கள் ஒவ்வொன்றின் வாயி லிலும் இராணுவச் சிப்பாய் கள் துப்பாக்கி ஏந்திய வண் ணம் காவல் புரிகின்றனர். சாதாரணமாக எவரும் உள்ளே புகமுடியாது. இரா ணுவமுகாமுள்ள பாதையால் போவதற்கே மக்கள் அஞ்சு வர் இந்நிலையில் இராணுவ முகாமுக்குள், இராணுவத் தினர் மத்தியில் வெளியார் துண்டுப்பிரசுரம் விநியோகிக் கப்படுவதானால் அதன் அர்த்த மென்ன? இராணுவ முகாம்க ளில் வெளியார் நுழைந்து அவர்களின் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும்கூட எடுத்துச் செல்லலாமல்லவா? அவ்வளவு கட்டுப்பாடும் பாது காப்புமில்லாமலா நமதுஇரா ணுவத்தினரும் இராணுவ முகாம்களும் இருக்கின்றன? இந்த இராணுவத்தை நாடு நம்பியிருக்கத்தான் முடி யுமா?-இப்படியான சந்தே கங்கள் எழுவதற்கு நியாய முண்டு.

இராணுவத்தினர் மத் தியில் வகுப்புவாதத்தைத் தூண்டிவிடக்கூடிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் படுவதாக நேற்றுச் செய்தி வெளியிட்ட அதே ஆங்கிலத் தினசரியின் நேற்றைய பதிப் பின் [உட்பக்கமொன்றில், உதவி போக்குவரத்து அமைச் சரின் தலைமையில் ஒரு மகா வித்தியாலய மைதானத்தில் சமாதான நீதவான் ஒருவ ருக்கு அளிக்கப்பட்ட வர வேற்பு உபசாரத்தில் கொத் மலைப் பிரதிநிதி திரு. டி பி.

அனுப்பப்பட்ட இராணுவத்தி னர்வெளிப்படையாகஅவர்கள் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றவில்லையென் பதையும் இப்பகுதிபொதுமக் கள் தொடர்ந்து நிம்மதியாக வாழமுடியாமலும் அவர்க ளும் நிம்மதியாக இருக்க முடியாமலிருப்பதையும்உண ர்ந்து இராணுவ முகாம்களை இங்கிருந்து அகற்றுவதற்கு இனியாவது அரசாங்கம்முன் வரவேண்டும்.

இராணுவம் நாட்டையும், நாட்டுமக்களையும் அரசாங் கத்தையும் பாதுகாக்க வேண்டுமாயின்அங்குஇனம், மதலிய உணர்ச்சிகளுக்குச் சற்றும் இடமிருக்கக்கூடாது.

## அரசாங்கத்துடன்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் கீழ் சிங்களமக்களின் ஆதரவுடன் அரசாங்கத் துடன் ஒத்துழைத்துத்தான் தமிழர்கள் உரிமைபெற முடியும் என்பதை கடந்த 20 வருட காலமாக நாம் கூறி வருகிறோம். 1956 ம் ஆண்டுவரை தமிழ்க்காங்கி ரஸ் அரசாங்கத்டடன் ஒத் துழைததுசில உரிமைகளைப் பெற்றதோடு தமிழ்ப் பகுதி களில் 3 தொழிற்சாலைகளை நிறுவி கிளிநொச்சிப் பகுதி யில் பல குடியேற்ற திட்டங் களை ஆரம்பித்து நூற்றுக் கணக்கான வாலிபர்களை குடியேற்ற வழிசெய்தோம் தமிழர்கள் பயமின்றி நிம் மதியாக வாழ்ந்தார்கள் தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து இருந்தது.

அரசாங்கத்துடன் ஒத்து ழைக்காமல் சிங்களமக்களின் ஆதரவில்லாமல் தமிழர்கள் உரிமைகளையோ பொருளா தார வளர்ச்சியையோ பெற்றுவிட முடியாது. கட ந்த காலங்களில் நடந்த அறப்போராட்டங்கள் சிங் களமக்களின் வெறுப்பையே தேடித்தந்துள்ளது.

ஆட்சிமன்றத்தில் உள்ள தமிழ்ப்பிரதிநிதிகள் எந்தச் சட்டத்தையும் கொண்டு வந்தும், சிங்களப் பிரதிநிதிக ளின் ஆதரவில்லாமல் நிறை வேற்றி விட முடியாதென் பதை நாம் மறக்கக்கூடாது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும்எவ்வித உரிமை யையும் நாம் பெற்றுவிட முடியாது. தமிழரசுக் கட் சியா? தமிழ்க்காங்கிரஸா? சரியான வழியில் செல்கிற தென்பதை வாலிபர்கள் தான் தீர்மானிக்க வேண் டும்.

திருவாளர்கள் ஈ கே. ராஜகுலேந்திரன், எஸ் பி. மயில்வாகனம் ஆகியோரும் பேசினார்கள்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ் வரன் ஆலயத்தில் சுக்கிர வாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை வித்துவான் க. கி. நடராஜன் பெரிய புராண விரிவுரைகள் தொட ரில் "திருநாவுக்கரசர் அப்பரானமை" என்ற பொருள்பற்றிய கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு சுக்கிர வார அம்மன் உற்சவமும் நிகழும்.

## பஞ்சாப் மேல் சட்டசபை இனி இல்லை

சண்டிகார், ஜன.8

பஞ்சாப் மேல் சட்டசபை இன்றுமுதல் இருக்கமாட் டாது. பஞ்சாப் முதல்அமை ச்சர் இதனை இன்று சண்டி காரில் அறிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல க்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

தலைவரி, உப்புவரி ... இலங்கையின் சிவில்

...6-ம் ஆண்டிலேயே சேர் அருணாசலம் உத்தி

பல முன்னேற்றமான திருத் தங்கள் செய்யப்பட்டன.

# முப்பெருந்துறைகளின் முதுபெருந்தந்தை

இந்த நாட்டிலே தேசிய எழுச்சிக்கு வழிகோலிய ஆறுமுக நாவலர் காட்டிய வழியிலே நின்று தொண் டாற்றிய அறிஞர்கள் தலை வர்கள் பலர். அவர்களுள் சேர் பொன் அருணாசலம் அவர்கள் முதன்மையான வர். அவருடைய சிந்தனை யில் தீர்க்கதரிசனமும் சுடர் விட்டது. அரசியல் எழுச்சி மட்டும் தேசிய எழுச்சியா காது, அதற்கு அடித்தள மும் வேண்டும் என்று நாவ லரைப்போல சமுதாய எழுச்சியிலும் நாட்டம் கொண்டிருந்தார். சமுதா யத்தில் வேரூன்றிய — பக் குவப்படுத்தப்பட்ட சமு தாயத்தில் வேரூன்றிய அர சியல் எழுச்சி, தேசிய எழு ச்சிதான் காலங்கடந்தும் நிலைத்து நிற்கக் கூடியது என்பது அவரது கருத்தா கும்.

எனவே அவர் காலத்திய மற்றவர்களைப்போல் அல் லாது தனது விடுதலை இயக் கப் பிரசாரங்களுடன்மூன்று பெரும் துறைகளை இணை த்து அவற்றின் அவசியம் பற்றியும் வற்புறுத்தினார். அவர் உள்ளூராட்சி இயக் கத்தையும் தொழிலாளர் நல இயக்கத்தையும் பல் கலைக்கழக இயக்கத்தையும் சேர்த்துக்கொண்டு அவற் றையும் திறம்பட நடத்தி னார். இம்மூன்று துறை களும் மிகப்பெரிய துறை கள்.

## உள்ளூராட்சி

உள்ளூராட்சி இயக்கத் தில் அவர் மிகத் தீவிர மான கருத்துக்கள் கொண் டிருந்தார். எந்த ஒரு மத் திய அரசும் திறம்படச் செயற்பட வேண்டுமானால் அதற்கு உறுதுணையாக் உள் ளூராட்சி அமைப்பு அமைய வேண்டும் என்பது அவ ரது அசையாத நம்பிக்கை. கிராமிய நகர்ப்புறப் பிரச் சினைகளில் ஒரு மத்திய அரசாங்கம் தனது மனித சக்தியையோ பொருட்சக் தியையோ, காலத்தையோ விரயம் செய்துகொண்டிருக் கமுடியாது. உள்ளூர்ப்பிரச் சினைகளை உள்ளூராட்சிமன்ற ங்களே கவனிக்கவேண்டும் என்பது அவரது கொள்கை அவர் இந்நாட்டுப் புராதன வரலாற்றிலிருந்து ஆதாரம் காட்டி அக்காலத்திலிருந்தே சிறந்த உள்ளூராட்சி முறை இயங்கிவந்ததைக் காட்டி னார். கி. மு. 5- ஆம் நூற் றாண்டிலேயே தலைநகரான அனுராதபுரத்திலிருந்த மாவட்டசபைகள் பற்றியும் அவற்றிற்கு இருந்த அதி காரங்கள் பற்றியும் மகா வம்சத்திலிருந்து ஆதாரம் காட்டினார். கல்வி கலாச் சார, சமூக பொருளாதார நீதித் துறைகளில் கணிச மான அதிகாரத்தை இந்தச் சபைகள் செலுத்தி வெற்றி கண்ட வரலாற்றை விளக் கினார். பிற்காலத்தில் ஏற் பட்ட பல்லவ சோழ உறவு களினால் அவர்களது உள்ளூ ராட்சி முறைக் கோட்பாடு களும் இங்கு இடம்பெற்று பழைய முறைகளுடன்இணை ந்து வளர்ந்ததையும் சுட் டிக்காட்டினார். அவர் விரு ம்பியது பரவலாக்கப்பட்ட ஆட்சிமுறை — பகிர்ந்து கொள்ளப்பட்ட அதிகாரங் களைக் கொண்ட ஆட்சி முறை அந்நியர்கள் இந் நாட்டில் திணிக்க முயன்ற உள்ளூர் ஆட்சிமுறையைக் காட்டிலும் மிகச் சிறந்தது இந்த நாட்டுப் பண்டைய முறை என்பதை அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவிலும் இன்றும் பஞ்சாயத்து முறை நடை முறையில் இருக்கிறது. பஞ் சாயத்து முறை இந்தியா வில் மிகப் பழையகாலம் தொட்டே சமுதாய அமை ப்பில் இணைந்த ஒன்று. இன் றைய நவீன இந்திய அர சியல் யாப்பிலும் அதற்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டி ருப்பதோடல்லாமல் அதிகா ரங்களும் கூட்டப்பட்டுள் ளன.

இன்றைய முன்னேறி வரும் முற்போக்கு நாடுக ளில் எல்லாம் பரவலாக்கப் பட்ட உள்ளூராட்சிமுறை யும் பகிர்ந்துகொள்ளப் பட்ட அதிகாரங்களும் இரு ப்பதைக் காணலாம். கல்வி கலாச்சார சமூக நீதிப் பிரச்சினைகளும் கணிசமான பொருளாதாரப் பிரச்சினை களும் உள்ளூராட்சி மன்றங் களின் நிர்வாகத்திற்குவிடப் பட்டுள்ளன அதனால் நாட்டு முன்னேற்றம் வெகுவாகத் தீவிரப்படுத்தப்பட்டுள் ளது. மத்திய அரசுகள்வெளி விவகாரபாதுகாப்பு பெரும் பொருளாதாரபிரச்சினைகள் பெரும்தேசியப் பிரச்சினை மட்டோடு நின்று அவற் றைத் திறம்படச் செய்து வருகின்றன.

சேர் பொன் அருணாசலம் அவர்கள் தனது விடுதலை இயக்கத்துடன் உள்ளூரா ட்சி இயக்கத்தையும் சேர்த் துக்கொண்டதன் தீர்க்க தரிசனத்தன்மையை இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் கருத்துகளுடன் ஒப் பிட்டுப் பார்க்கையில் அவரை வெகுவாகப் பாரா ட்டாமல் இருக்கமுடியாது. அவர் உள்ளூராட்சி இயக கத்தின் தந்தை என்பதை யும் யாரும்மறுத்துவிட முடி யாது.

-ஆ. தேவராசன்-

## தொழிலாளர் நலம்

விடுதலைபெற்ற ஒரு விழு விய நாடாக இலங்கை திகழவேண்டுமானால் அங்கு தொழிலாளர் நலமுடைய வாழ்வு வாழவேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் இலங்கைத் தொழி லாளருக்கான நலவுரிமை களுக்காகப் பாடுபட்டார். அடிப்படை மனிதத் தேவை களான மருத்துவ வசதி, சுகாதாரவசதி, நல்ல உணவு அடிமைத்தனமற்ற சுதந்திர வாழ்வு, அடிப்படைச் சம் பளம், பெண் தொழிலாளர் சலுகைகள் ஆகியவற்றிற் காகச் சேர் அருணாசலம் இடையறுது போராடினார். அவர் தன்னுடைய முயற்சி யால் தொழிலாளர் நலம் பற்றி ஆராய ஓர் ஆணைக் குழுவைக்கூட அரசாங்கம் நியமிக்கச்செய்தார். இந்தக் குழுவில் அவரும் இடம் பெற்றார். அதன் பயனாகப் பல முன்னேற்றமான சிபார் சுகள் செய்யப்பட்டு, மீளா அடிமை என்ற நிலையிலிருந்த தொழிலாளி, விடிவுநோக் கிக் காலடி எடுத்துவைக்க வழிபிறந்தது. நாட்டு வளம் பெருக்கும் தொழிலாளி வாழாமல் நாடு வாழமுடி யாது. எனவே இந்தப் புனிதப் பணிபுரிந்து தொழி லாளர் தோழனாக மாறி னார் சேர் பொன் அருணா சலம். அன்னார் தொழிலா ளர் நலம் கருதிச் செய்த பணியை இலங்கையில் தொழிலாளர் இயக்கத்தில் முன்னணியில் இருக்கின்ற இடதுசாரி இயக்கங்களே ஒப்புக்கொண்டு பாராட்டு கின்றன. இந்தத்துறையிலும் அவர் தீர்க்கதரிசனத்தோடு செயற்பட்டுத் தொழிலா ளர் இயக்கத்தின் தந்தை என்ற பெயரையும் பெற் றுக்கொண்டதில் வியப் பில்லை.

## பல்கலைக்கழகம்

இலங்கைக்கு ஒரு பல் கலைக்கழகம் வேண்டுமென்று வாதாடி அதற்காக ஓர் இயக்கம் கண்டவரும் அவரே. பல்கலைக்கழகம் ஒரு நாட்டின் அபிவிருத்தி யோடு இணைந்திருக்கவேண் டும். அப்போதுதான் பல் கலைக்கழகத்தால் நாடு பய னடையும் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பெற்ற நாடு பெருமை கொள்ளமுடியும். பல்கலைககழகம்பற்றி நீண்ட ஆணித்தரமான அறிக்கை களைச் சமர்ப்பித்துள்ளார். அவற்றில் நாவலரின் கல்விச் சிந்தனை இவரை ஆட்கொண் டிருந்த தன்மையை உற் றறியமுடிகிறது. நாவலர் தனது காலத்திலேயே பல் கலைக்கழகத்துக்கு ஒப்பான ஒரு திட்டத்தை வெளியிட் டிருந்தார். இதைப் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலரின் ஐந் தாண்டுத் திட்டம்' என்று அழகாக அழைக்கின்றார். சேர் பொன். அருணாசலம் அவர்கள் சமர்ப்பித்த அறிக் கையிலும் இந்நாட்டு மொழிக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள் ளார். பல்கலைக்கழகத்திற் கான அவர் திட்டம் மிக ஆணித்தரமானது.

இலங்கையில் தமிழ்க்கல் விக்காக, தமிழர் தேசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட ஒருவர் இருந்தாரென்றால் அதன் முன்னோடியாக ஒரு வர் இருந்தாரென்றால் அவர் தான் ஆறுமுகநாவலர். ஆறுமுகநாவலர் கருத்தால் உந்தப்பெற்றுப் பல்கலைக் கழகத்துக்காக உழைத்த ஒரேயொருவர் சேர். பொன் அருணாசலம் அவர்கள்.

பலதிறப்பட்ட பணிபுரிந்த சேர் பொன், அருணாசலம் அவர்கள், முப்பெரும் துறை களின் முதுபெரும் தந்தை யாகத் திகழ்வதை வரலாற் றிலிருந்து எவரும் நீக்கி விடமுடியாது. உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்படும் இச்சமயத்தில் அவரை நினைவுகூர்வது மிக அவசி யம்.

...ம தெனினும், ஏழைமக் களுக்கு இவ்விஷயமாக வுள்ள சங்கடங்களை விளக் கத்தேவையில்லை. நீதிமன் றங்களுக்குச்சென்று வழக் காடி நீதி பெறுவதற்காகும் செலவையும், காலத்தையும் கூடுமான வரை குறைக்கக் கூடிய வகையில், இத் தொழிலை மக்களின் சேவை யாக மாற்றசெனேட்டர் நடேசனின் தலைமையில் அச் சங்கம்கூடுமானதைச் செய்யு மென்றே நம்புவோம்.

இந்நாட்டிலுள்ள சில சட் டங்கள் மனித அடிப்படை உரிமைகளுக்கு ஒத்ததாக இல்லை. இலங்கை அரசாங் கம், ஐ. நா. வின் மனித அடிப்படை உரிமைச்சாசன த்தை இன்னும்ஒப்புக்கொள் ளாதது ஒரு குறையே. இதற் குக் காரணம் எதுவாயினும் இந்நிலை குறித்து இலங்கை பெருமை கொள்ளுவ சற் கில்லை இந்தக்குறையும் சீக்...

...யுள்ளனரெனினும், அதைப் படிப்பிக்க, தக்க ஆசிரியர் கள் இல்லையென்பது பகி ரங்க ரகசியம். சைவசமய சாஸ்திரங்களை முறையாகக் கற்க இங்கு ஆசிரியர்களுக்கு ஏதுவாய்ப்பு? ஈழத்து சைவ சமயஸ்தாபனங்களும் சைவ ஆசிரியர்களும் கல்விஅமைச் சைக் கேட்டுக்கொண்டால் சுவாமி அவர்களின் பணி இங்கு தொடர்ந்து கிடைக் கும்படியாக இருக்கும். இவ் விதமான சந்தர்ப்பம்நமக்கு மீண்டும் கிடைப்பது சுலப மன்று.

0 0 0

மருந்தாகியுள்ளாய் உப்ப ரோடு லருக்கெல்லாம், பெரு மருந்தாகி நின்றாய் பேரமுதின் சுவையாய்க், கருமருந்தாகியுள்ளாய் ஆளும்வல்வினைகள்தீர்க்கும், அருமருந்தாலவாயில் அப் பனே அருள்செயாயே.

—அப்பர் அடிகள்

## பெரிய சேவை

கோட்டை, வியா,

அரசாங்கத்தை 1965-ல் தேசிய அரசுபொறுப்பேற் குப்போது வெறுமையான திறைசேரியே இருந்தது. தொழில் பிரச்னை, பொரு ளாதார மந்தம் ஆகிய பிரச்னைகளுக்கு மத்தியில் தேசிய அரசு பொதுமக்க ளின் தேவைக்காகமாபெரும் சேவைசெய்துள்ளது என்று பிங்கியாவில் நடைபெற்ற கூட்டத்தில்உள்நாட்டமைச் சர் டாக்டர் தகநாயக்கா கூறினார்.

## வெள்ள நிவாரண பட்டியல்

முசலி, வியாழன்

மன்னார், முசலி, மாந் தைக் காரியாதிகாரிகள் பிரிவிலிருந்து வெள்ள நிவா ரணத்துக்கான புள்ளி விப ரங்களை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தனது பிரிவின் கீழுள்ள காரியாதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

# வெள்ளக்கஷ்ட நிவாரண நிதிக்கு ஒரு நாள் சம்பளம்

## மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கிழக்கு, தெற்கு மாகா ணங்களில் வெள்ளத்தால் பெரும் சேதங்கள் ஏற்பட் டுள்ளதாக மேலும் பல விப ரங்கள் கிடைத்துவருகின் றன. அவர்களது கஷ்ட நிவாரணத்துக்காக இங் குள்ள அரசாங்க ஊழிய ரெல்லாம் ஒரு நாள் சம்ப ளத்தை உதவவேண்டுமென யாழ். மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் ஒரு தீர் மானம்மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கஷ்ட நிவாரண நிதியைத் திரட்டுவதற்காக, அரசாங்க அதிபர் கூடிய சீக்கிரம் ஒரு கூட்டம் கூட்டுவாரெனத் தெரிகிறது.

இந்தி நிதிக்காக ஈழநாடு' காரியாலயத்தில் நேற்றுக் கிடைத்த தொகை வரு மாறு: சுபாஸ் டூரிஸ் ஹோட் டல் உரிமையாளர் திரு. ஏ. சங்கரன்: 100 ரூபா, திரு. ஆர். சோமலிங்கம், 330, கே.கே.எஸ்.ரோட், யாழ்ப் பாணம்: 10 ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org